மலர்-1 இதழ்-14 மார்ச் 16-31 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்**



# பாரதத்தை செழிப்படையவைத்த பசுக்கள்

# மனித வாழ்க்கைக்கு தேவையான சகல சுகங்களையும் அருளும்

# சுகாசனமூர்த்தி

சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முக்தம், மயூரம், சுகம் என ஒன்பது வகை ஆசனங்கள் உள்ளதாக ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. ஒரு காலை இருக்கையில் மடித்தமைத்து மற்றொரு காலைத் தொங்க விட்டு அமர்ந்திருப்பதே சுகாசனம் ஆகம்



சிவபெருமானின் பலவகையான திருக்கோலங்கள், பலவித காரண, காரியங்களுக்காக உருவானவையாகவே விளங்குகிறது. எந்நேரமும் அரவ (பாம்பு) மாலையும், சாம்பலும் அணிந்து காட்சி தரும் சிவபெருமான், புதிய பட்டுடுத்தி, தங்க ஆபரணங்கள் தரித்து நான்கு அல்லது ஆறு கரங்களுடன் அற்புதத் தெய்வத் திருமேனியாக காட்சி தருவதை சுகாசனமூர்த்தி என்று கூறப்படுகிறது.

இவ்வாறாக காட்சியளிக்கும் சுகாசன மூர்த்தியை வழிபட்டால் வாழ்வில் சகல சுகங்களையும் அடைந்து இன்புற்ற வாழலாம் என்று சிவ ஆகமங்களும் கூறுகிறது.

திருக்கயிலையில் உமாதேவியார் சிவாகமங்களினது தத்துவங்களைத் தமக்குப் போதிக்க வேண்டிப் பிரார்த்திக்கச் சிவபெருமான் சுகாசனத்தில் அமர்ந்து உபதேசித்த திருக்கோலமே சுகாசன மூர்த்தியாகும்.

சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முக்தம், மயூரம், சுகம் என ஒன்பது வகை ஆசனங்கள் உள்ளதாக ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. ஒரு காலை இருக்கையில் மடித்தமைத்து மற்றொரு காலைத் தொங்க விட்டு அமர்ந்திருப்பதே சுகாசனம் ஆகம்.

சில்பரத்தினம், ஸ்ரீ தத்துவநிதி ஆகியவற்றில் சுகாசனமூர்த்தி திருவுருவம் விவரிக்கப்பட்டுள்ளது. சில்பரத்தினத்தின்படி, இம்மூர்த்தி, ஒரு முகமும் மூன்று கண்களும், நான்கு கரங்களும் கொண்டு பவளச் சிவப்பு நிறமுடையவராக அழகுமிக்கவராக பத்ர பீடத்தின் மீது நிமிர்ந்து அமர்ந்திருப்பார். சுகாசனத்தில் அமர்ந்த இவர் புலித்தோலையும் பட்டாடைகளையும் அணிந்திருப்பார்.

அவரது பின் வலக்கரத்தில் மழுவும், பின் இடக்கரத்தில் மானும் திகழும், முன் வலக்கை அபயஹஸ்தமாகவும், முன் இடக்கை வரத ஹஸ்தமாக அல்லது சிம்ஹகரணமாகவும் அமைந்திருக்கும்.

வலக்காதில் மகர குண்டலம் அல்லது சிம்ஹ குண்டலமும் இடக்காதில் பத்ர குண்டலமும் இவர் தரித்திருப்பார், அல்லது இவரது இரு காதுகளிலும் வரத்த குண்டலம் திகழும். ஜடா மகுடம், சர்ப்பகங்கணம், யக்ஞோபவீதம் ஆகியவற்றையும் இவர் அணிந்திருப்பார். இவர், சோமாஸ்கந்த மூர்த்தத்தில் தேவியும் கந்தனும் நீங்கிய வடிவமாகக் காட்சி தருவார்.

சில நூல்களில் ஒரு முகமும் ஆறுகரங்களும் கொண்டு வலத்திருக்கை ஒன்று சின்முத்திரை காட்ட வேத சிவாகமப் பொருளை அம்பிகைக்கு உபதேசிக்கும் கோலமாக இவ்வடிவம் காட்டப்படுகிறது.

சிவபராக்கிரமம் என்ற நூலில் சிவபெருமானும் அம்பிகையும் சேர்ந்து சோமாஸ்கந்த வடிவத்தில் கந்தனின்றி அமைந்ததாகக் காட்டப்படுகிறது.

புதிதாக திருமணமான தம்பதிகள் இந்த மூர்த்தியை வழிபட்டால் வாழ்வில் எந்த குறையும் இன்றி அனைத்துவித சுபபோகமும் கிடைக்கும் என்று முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

அதுமட்டுமின்றி சுகபோக வாழ்க்கையை விரும்புபவர்கள் இந்த சுகாசனமூர்த்தியை வழிபட்டால், அவர்களின் வாழ்வில் சகல சுகங்களையும் அடைந்து இன்புறுவர் என்று ஆகமங்கள் கூறும்.

– சி.ஷ்யாம் சுந்தர்



ஆன்மிகமலர் மெயில் புக்

16–31 மார்ச் 2017 3

www.aanmeegamalar.com

# கிரகங்களின் சிறப்புகள்

ஒவ்வொரு கிரகத்திற்கு ஒவ்வொரு சிறப்பு உண்டு இந்த கிரகங்கள் ஒவ்வொருவரின் ஜாதகத்தில் மிக முக்கியமாக விளங்குவதால் ஒவ்வொருவரின் ஜாதகத்திற்கும் உகந்த கிரகங்கள், ஆகாத கிரகங்கள் என்று நமது முன்னோர் மிக நேர்த்தியாக வகுத்து வைத்துள்ளனர்.

அதன்படி ஒவ்வொரு கிரகத்திற்கு எது பிடிக்கும். எது அந்த கிரகத்திற்குரியவர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் மிக தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

முன்னோர்களின் கூற்றை மட்டுமே முழுவதுமாக கடைபிடித்து இன்றும் பலர் பல இடங்களில் ஜோதிடப் பரிகாரங்களை தெளிவகாவும் உண்மையாகவும் கூறிவருகின்றனர்.

அந்தவகையில் கிரகங்களுக்குரிய, கிரகங்களுக்கு சம்பந்தப்பட்ட ஒருசில முக்கிய தகவல்களை அரிந்துக் கொள்ளலாம்.

## கிரஹங்களின் வாகனங்கள்

| | |
|---|---|
| சூரியன்: | மயில், தேர் |
| சந்திரன்: | முத்து விமானம் |
| செவ்வாய்: | (அன்னம்) செம்போத்து, சேவல் |
| புதன்: | குதிரை, நரி |
| குரு: | யானை |
| சுக்ரன்: | கருடன், குதிரை, மாடு, விமானம் |
| சனி: | காக்கை, எருமை |
| ராகு: | ஆடு |
| கேது: | சிம்மம் |

## கிரஹங்களின் நட்பு வீடுகள்

| | |
|---|---|
| சூரியன்: | விருச்சிகம், தனுசு, கடகம், மீனம் |
| சந்திரன்: | மிதுனம், சிம்மம், கன்னி. |
| செவ்வாவ்: | சிம்மம், தனுசு, மீனம் |
| புதன்: | ரிஷபம், சிம்மம், துலாம். |
| குரு: | மேஷம், சிம்மம், கன்னி, விருச்சிகம். |
| சுக்ரன்: | மிதுனம், தனுசு, மகரம், கும்பம். |
| சனி: | ரிஷபம், மிதுனம். |
| ராகு, கேது: | மிதுனம், கன்னி,துலாம், தனுசு, மகரம், மீனம். |

## கிரஹங்களின் சுவைகள்

| | |
|---|---|
| சூரியன்: | கார்ப்பு |
| சந்திரன்: | உப்பு |
| செவ்வாய்: | எரிப்பு, உறைப்பு |
| புதன்: | உவர்ப்பு |
| குரு: | தித்திப்பு |
| சுக்ரன்: | புளிப்பு |
| சனி: | கைப்பு |
| ராகு: | கைப்பு |
| கேது: | உறைப்பு |

## கிரஹங்களின் தெய்வங்கள்

| | |
|---|---|
| சூரியன்: | சிவன் |
| சந்திரன்: | பார்வதி |
| செவ்வாய்: | சுப்ரமண்யர் |
| புதன்: | விஷ்ணு |
| குரு: | பிரம்மா, தக்ஷிணாமூர்த்தி |
| சுக்ரன்: | லக்ஷ்மி, (இந்திரன்), வருணன் |
| சனி: | யமன், சாஸ்தா |
| ராகு: | காளி, துர்கை, கருமாரியம்மன் |
| கேது: | விநாயகர், சண்டிகேச்வரர் |

## கிரஹங்கள் பலன் தரும் காலங்கள் !!!

| | |
|---|---|
| சூரியன், செவ்வாய்: | ஆரம்ப காலத்திலேயே பலன்களைக் கொடுப்பார்கள். |
| சந்திரன், புதன்: | அவர்கள் காலம் முழுவதும் பலன்களைக் கொடுப்பார்கள். |
| குருவும், சுக்ரனும்: | அவர்கள் காலத்தின் மத்தியில் பலன்களைக் கொடுப்பார்கள். |
| சனி, ராகு, கேது: | (பிற்கூரிலே) பலனைக் கொடுப்பார்கள். |






# மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 8,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

aanmeegamalar@gmail.com

whatsapp: 7299992699

# உபாசனா தெய்வம் ஒன்னோட பேசும்

**படத்ல அம்பாள் இருக்கறதா நெனச்சுதான பூஜை பண்றே? அப்போ.... இந்த கொறையைக் கூட அவகிட்டயே சொல்லியிருக்கலாமே? ஆனா, ஒண்ணுலயும் ஒனக்கு பிடிப்போ, நம்பிக்கையோ இல்லை. அம்பாள் ஓங்காத்துலேயே, ஒன் பக்கத்துலேயே இருக்கறச்சே, ஒன் கொறையை அவட்ட சொல்லி அழத் தெரியலையே! இனிமே அவகிட்டயே சொல்லி அழு! இங்க வராதே**



சிமிழி பிரஹ்மஸ்ரீ வெங்கட்ராம சாஸ்த்ரிகள் பெரியவாளுடைய அன்புக்கும் அபிமானத்துக்கும் ரொம்ப அருகதை உடையவர். அப்படியொரு அனுஷ்டானம்! பெரியவாளிடம் பக்தி!

அவர் மறைந்ததும், அவருடைய பிள்ளைக்கு பால்யத்திலேயே ரெண்டு சன்யாசிகள் மூலமாக தேவி உபாசனை உபதேசிக்கப்பட்டது. பல ஆண்டுகள் உபாசித்தும் "உபாசனையில் வாக்கு, சரீரம் ரெண்டும் ஈடுபடர அளவு, மனஸ் ஈடுபட மாட்டேங்கறது. அதனால மனசுக்கு சாந்தி கெடைக்கவேயில்லை" என்ற இந்த உண்மையான எண்ணம் ரொம்ப வலுத்துக் கொண்டே போனது. பல வழிகளை கையாண்டும் ஒன்றும் பிரயோஜனமில்லை. பெரியவா மட்டுமே இதற்கு வழி காட்டமுடியும் என்ற நம்பிக்கையில் பெரியவாளிடம் வந்தார்.

கார்வேட் நகரில் ஒரு குளக்கரையில் அழகாக வேய்ந்திருந்த ஒரு சிறு கொட்டகையின் வாசலில் அமர்ந்திருந்தார். எத்தனைதான் அறிமுகம் இருந்தாலும், பூர்வர்கள் யார் யார் என்பதெல்லாம் தெரியாதது மாதிரி கேட்டுக் கொள்வார். நாம் இன்னாரது வம்சத்தில் வந்திருக்கிறோம் என்று சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்வதை அவர் மிகவும் விரும்புவதாக இருக்கும். இந்த உபாசகரும் தான் சிமிழி சாஸ்த்ரிகள் பிள்ளை என்று சொல்லிவிட்டு, தன் மனஸ் படும் கஷ்டத்தை சொல்லி, வழிகாட்ட வேண்டும் என்று வேண்டினார். அப்போது நடந்த சம்பாஷணை..

"தேவி உபாசனை பல வர்ஷங்களா பண்ணிண்டு இருக்கேன். ஆனா, மனஸ் துளிகூட ஈடுபடலை. ரொம்ப உறுத்தறது. எனக்கு ஒரு வழி காட்டணும் பெரியவா"

"என்ன சொல்றே? அதனால என்ன தப்பு?"

"மனஸ் தனி வஸ்துவா இருக்கறதால, பூஜை முழுமையாகாத மாதிரி இருக்கு"

"அதுக்கு நா என்ன பண்ணறது?"

"மனஸ் ஈடுபட ஒரு வழி காட்டணும்"

"என்ன படிச்சிருக்கே?"

............சொன்னார்.

"இத்தனை படிச்சும், ஒனக்கு விவேகமில்லே! ஒன் மனசை நா திருத்த முடியாது"

"என்னாலேயே என்னை திருத்திக்க முடியலை. அதான் பெரியவாட்ட வந்தேன்"

"என்னை என்ன செய்ய சொல்றே?"

"மனஸ் சாந்தி அடையணும்"

"நீ என்ன பூஜை பண்றே?"

"அம்பாளை படத்துலேயும், விக்ரஹத்துலேயும், யந்த்ரத்துலேயும் பூஜை பண்ணறேன்"

"ரொம்ப சரி. படத்ல அம்பாள் இருக்கறதா நெனச்சுதான பூஜை பண்றே?"

"ஆமாம்"

"அப்போ.... இந்த கொறையைக் கூட அவகிட்டயே சொல்லியிருக்கலாமே? நெறைய படிச்சிருக்கே. படம், விக்ரஹம், யந்த்ரம்ன்னு எல்லா எடத்துலேயும் அவ இருக்கறதா பூஜையும் பண்றே. ஆனா, ஒண்ணுலயும் ஒனக்கு பிடிப்போ, நம்பிக்கையோ இல்லை. அம்பாள் ஓங்காத்துலேயே, ஒன் பக்கத்துலேயே இருக்கறச்சே, ஒன் கொறையை அவட்ட சொல்லி அழத் தெரியலையே! இனிமே அவகிட்டயே சொல்லி அழு! இங்க வராதே. நான் என்ன பண்ண முடியும்?"

மிகவும் சூடாக பதில் வந்ததும், உபாசகர் விக்கித்து நின்றார். மனஸ் இந்த பேரிடியை தாங்கமாட்டாமல், கண்களில் ஜலம் முட்டி நின்றது. நமஸ்காரம் பண்ணிவிட்டு உத்தரவு வாங்கிக் கொள்ள யத்தனித்தார். அம்பாள் மனஸ் இறங்கினாள்..

"ரொம்ப கோவிச்சுண்டுட்டேனா! நீயே ரொம்ப ஆசையா அம்பாளை உபாசனை பண்றே! மனஸ் ஈடுபடலை..ன்னு ஒனக்கே தெரியறது. உபாசனைன்னா சமீபத்ல இருக்கறதுன்னு அர்த்தம். ஒனக்கு எப்பவுமே பக்கத்ல இருக்கறவள் கிட்டே ஒன்னோட கொறையை சொல்லாம, நீட்டி மொழக்கிண்டு எங்கிட்ட வந்தியே !ங்கறதாலதான் கொஞ்சம் அப்பிடி ஒரைக்கறா மாதிரி சொன்னேன்.

இனிமே என்ன கொறையானாலும், எதுக்கும் அவளைத் தவிர வேற யார்கிட்டயும் சொல்லக் கூடாது! நீ பூஜை பண்ற தெய்வத்துகிட்ட, அது அம்பாளோ, சிவனோ, விஷ்ணுவோ, பிள்ளையாரோ. யாரா இருந்தாலும் சரி, அவா கிட்டேயே கேட்டாத்தான் ஒன்னோட நம்பிக்கைக்கு ஏத்தா மாதிரி அனுக்ரகமும் கெடைக்கும். உன் உபாசனா தெய்வம் ஒன்னோட பேசும். என்ன? புரிஞ்சுதா?.. நம்பிக்கைதான் எல்லாம். அவளோட அனுக்கிரகம் ஒனக்கு நிச்சயமா உண்டு! கவலைப்படாதே.. க்ஷேமமா இரு!" என்று அபயஹஸ்தம் "கொடுத்தாள்"!

பெரியவா கூறிய உபாசனை தெய்வம் நம்மோடு பேசும்ன்ற அந்த அருள்வாக்கை கேட்ட அன்பர்கள் மெய்மறந்தனர். எவ்வளவு பெரிய விஷயத்தை பெரியவா தெளிவு படுத்தினார்.

# போதாயன அமாவாசை



போதாயனர் என்று ஓர் மகரிஷி. விந்திய மலைக்கு தெற்கில் வாழ்ந்ததாக கூறப்படுகிறது

இவரது வம்சத்தைச் சேர்த்தவர்களே போதாயன ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்கல் என்று அழைக்கப்படுகின்றனர்.

போதாயனரின் சீடரே ஆபஸ்தம்ப மகரிஷி என்றுகூட சொல்வதுண்டு. இந்த போதாயன ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்கள் அமாவாசை தர்ப்பணம் செய்ய வேண்டிய நாளே போதாயன அமாவாசை என்று கூறப்படுகிறது.

பஞ்சாங்களில் இதை போதா அமா என்று குறிப்பிட்டிருப்பார்கள். பொதுவாக மற்றவருக்கான அமாவாசை நாளுக்கு முதல் நாள் போதாயன அமாவாசை நிகழும். இந்த போதாயன அமாவாசை முதன் முதலாக ஏற்பட்ட சரித்திரம் மஹாபாரதத்தில் காணப்படுகிறது.

மஹாபாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சமாதானம் ஏற்படாமல் இனிமேல் யுத்தம்தான் ஒரே தீர்வு என்று தீர்மானமானவுடன் துரியோதனன் யுத்தத்தில் தனக்கே வெற்றி கிடைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டன்.

எந்த நாளில் போர் துவங்கினால் எனக்கு வெற்றி கிட்டுமோ அந்த நல்ல நாளை குறித்துத் தா என்று பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சகாதேவனிடம் கேட்டான்.

எதிரி வந்து கேட்டுவிட்டான் என்பதற்காக பொய்யான நாளை கணித்துக் கொடுக்காமல், தர்மத்தின் வழியில் நடக்கும் சகாதேவனும் தர்மத்துக்கு கட்டுப்பட்டு அமாவாசை திதி நாளன்று யுத்தத்தை ஆரம்பித்தால் தாங்களும், தங்களது படையும் நிச்சயம் வெற்றி கிட்டும் என்று சகாதேவன் அறிவுரை சொல்கிறார்.

சகாதேவனின் கணிப்பு எந்த இடத்திலும் தவறியதே கிடையாது. அதன்படி எதிரியான துரியோதனனின் வெற்றி நாளை சரியாக கணித்துகொடுத்துவிட்டானே சகாதேவன் என்று பஞ்சபாண்டவர்கள் கவலையடைகிறார்கள்.

அவர்கள் தங்களின் கவலையை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று முறையிடுவது ஒன்றே நமக்கு உள்ள வழி என்று எண்ணி ஸ்ரீ கிருஷ்ணரிடம் சென்று இனிமேல் என்ன செய்வது? என்று கேட்க ஸ்ரீ கிருஷ்ணரும் யோசனை செய்து அதற்கான மாற்றுவழியைக் கூறுகிறார்.

அதாவது அமாவாசைக்கு முதல் நாளில் பாண்டவர்களில் மூத்தவரான தர்ம புத்திரரை விட்டு அமாவாசையன்று செய்யப்படும் தர்ப்பணத்தை செய்யச் சொன்னார்.

தர்மபுத்திரரும் அவ்வாறே அமாவாசைக்கு முதல் நாளான சதுர்த்தசி திதியன்றே தமது முன்னோருக்கு தர்ப்பணம் செய்கிறார்.

அதைப் பார்த்து ஆச்சர்யமடைந்த சூரியனும் சந்திரனும் அடடா பாண்டவர்களின் தவறுதலாக அமாவாசையை கணித்து விட்டார்கள் போலிருக்கிறதே நாளைதானே அமாவாசை என்ன செய்யலாம்?

நாமே இவர்களிடம் நேரில் சென்று விவரத்தை சொல்லுவோமே என்று நினைத்து சூரியனும் சந்திரனும் தர்மபுத்திரர் அமாவாசை தர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் இடத்துக்கு வந்து “நாளைதானே அமாவாசை நீங்கள் இன்றே தர்ப்பணம் செய்கிறீர்களே” என்று விவரத்தைக் கேட்டனர்.

அதற்கு அங்கே பாண்டவர்களுடன் இருந்த கிருஷ்ணர் பதில் சொன்னார். “சாஸ்த்திரத்தில் அமாவாசை திதி என்பது சூரியனும் சந்திரனுமாகிய நீங்கள் இருவரும் ஒன்றாக இணையும் நாள் எனக் கூறப்பட்டுள்ளது.

இப்போது நீங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து தானே இருக்கிறீர்கள் ஆகவே இன்றுதான் அமாவாசை திதி“ என்று பதில் சொன்னார். சூரியனும் சந்திரனும் செய்வதறியாது திகைத்தனர்.

ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னதை ஏற்றுக்கொண்டனர்.

தர்மபுத்திரர் அமாவாசை தர்ப்பணம் செய்வதால் இன்றுதான் அமாவாசை என்று தவறுதலாக நம்பியதால் துரியோதனன் முதலான கௌரவர்களும் அமாவாசைக்கு முதல் நாளே பித்ரு தர்ப்பணம் செய்தனர். மேலும் அன்றே அதாவது அமாவாசைக்கு முதல் நாளே மஹாபாரத யுத்தத்தை ஆரம்பித்தனர்.

ஆகவேதான் மஹாபாரத யுத்தத்தில் துரியோதனன் சைன்யங்களுக்கு வெற்றி கிடைக்காமல் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்த நிகழ்ச்சி நடந்தது முதல் அமாவாசை என்பது இரண்டு விதமாக ஆகி போதாயன அமாவாசை என்பது புதிதாக ஆரம்பமாயிற்று.







# ஒவ்வொரு தெய்வங்களுக்குரிய

# வாகனங்கள்



எந்தக் கடவுளருக்கு என்ன வாகனங்கள என்று சைவ, வைணவ ஆகமங்கள் கூறுவதைக் காண்போம்:

1. ஸ்ரீ மஹா கணபதிமூஞ்சுறு Ganesh/ Vinayaka=Mouse
2. வேல் முருகன் மயில் Kartikeya/Skanda/ Murugan-Peacock
3. சிவ பெருமான் காளை, நந்தி Shiva=Bull
4. ராஜ ராஜேஸ்வரிசிம்மம் Raja Rajeswari= Lion
5. மஹா விஷ்ணு கருடன் Vishnu= Garuda/ Eagle
6. பைரவர் நாய் Bhairava=Dog
7. சாஸ்தாகுதிரை Sastha= Horse
8. அய்யப்பன் புலி Ayyappa= Tiger
9. சனைச்சரன்காகம் Sani/Saturn= Crow
10. கல்கி குதிரை Kalki Avatar=Horse
11. இந்திரன்ஐராவதம் யானை Indra= Airavata/ Elephant
12. லெட்சுமிசெந்தாமரை, ஆந்தை Lakshmi= Red Lotus, Owl
13. சரஸ்வதி வெண் தாமரை, அன்னம் Sarasvati=White Lotus, Swan
14. கங்காதேவிமகரம்/முதலை Ganga Devi= Crocodile
15. மன்மதன், ரதிகிளி vilanamatha & Rathi= Parrot
16. குபேரன்மனிதன், கிளி, குதிரை, கீரி Ku-bera= Man,Parrot or Horse
17. விஷ்ணு சேஷ (பாம்பு) வாகனம் Vishnu= 7 headed Snake/ Sesha
18. கண்ணன் ஆல இலை Krishna=Banyanleaf
19. பிரம்மா அன்னம் Brahma= Swan
20. கார்த்திகேயன் காண்டாமிருகம் (வியட்நாம்) Kartikeya=Rhino (Vietnam)
21. சண்டி தேவிபன்றி/வராஹம் (சுஜனாகாட்) Chandi= Pig
22. சிந்தி இன மஹான்மீன் Sindhi saint= Fish
23. கண்டபேரண்ட பட்சி மன்னார்குடி ராஜகோபாலசுவாமி Ganda Beranda Bird= Mannarkudi Rajagopalswamy
24. வருணன் மகரம் Varuna= Makara (Shark or Crcodile)
25. அக்னி ஆடு Agni / Fire= Ram
26. துர்க்கைகலைமான் Durga= Antelope
27. மருத் மான் Marut= Deer
28. நேபாளத்தில் லெட்சுமி ஆமை, வங்காளத்தில் ஆந்தை Lakshmi in Nepal=Turtle, In Bengal=owl
29. துர்க்கைபுலி அல்லது சிங்கம் Durga= Lion or Tiger
30. சாமுண்டிஆந்தை Chamundi- Owl Picture:

Navagrahas with Vahanas

31. கழுதைஅஸ்வினிதேவர்கள், இந்திரா, அக்னி Asvini Devas= Donkey (also for Indra and Agni)
32. பிண வாகனம்நிருதி
33. சூரியன்ஏழு குதிரைகள் Sun= 7 Horse Chariot
34. ராகு, சஷ்டி பூனை Rahu/ Shasti= Cat
35. ரதி புறா Rathi= Pigeon



கீழ்கண்ட (36 to 43) வாகனங்கள் பொதுவாக கோவில்களில் எல்லா தெய்வங்களையும் உலா விடப் பயன்படுத்துகின்றனர்

36. சூரிய பிரபைவட தமிழ்நாட்டு தெய்வங்கள் Surya Prabha (SUN)= Northern Districts of Tamil Nadu
37. சந்திர பிரபை வட தமிழ்நாட்டு தெய்வங்கள் Chandra Prabha (MOON)= Northern Districts of Tamil Nadu
38. கற்பக விருட்சம் Karpaka Vrksha= (Wish fulfilling Tree)
39. காமதேனு Kamadenu= Wish fulfilling Cow
40. கைலாச வாகனம் Kailash Vahana= Siva
41. பூபால வாகனம் Bhupala Vahanam= Vishnu
42. புருஷாமிருக வாகனம் Purusha Mrugam
43. பூத வாகனம் Bhuta Vahanam= Shiva
44. புன்னைமர வாகனம் Punnai Tree Vahana= krishna
45. காராம்பசு வாகனம் Karampasu Vahanam (See Kamadhenu)
46. ஆடுகள் பூட்டிய ரதம்பூஷன் Goat Chariot=Pushan
47. ஏழு பசுக்கள் பூட்டிய ரதம்உஷஸ் 7 Cow Chariot=Ushas
48. காளியாளி Kali= Yali (Yali is a mythical animal)
49. பாம்புமானசா தேவி Snake= Manasa Devi
50. சீதளா தேவி கழுதை Seetala= Donkey
51. விஸ்வகர்மாயானை Viswakarma= Elephant


ஆன்மிகமலர் மெயில் புக்

# கோடையின் கொடுமையை போக்கும் அரிய மருந்து

# நுங்கு



கோடைக்காலத்தில் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு இன்னல்களுக்கு அரு மருந்தாக விளங்குவது நுங்கு, உடல் சூட்டை தனிப்பது மட்டுமின்றி வெயிலால் பெண்களின் முகத்தில் ஏற்படும் வறட்சியையும் போக்கும் அரு மருந்தாகவே விளங்குகிறது.

இந்த நுங்கு மிகவும் சுவையாக இருப்பது மட்டுமின்றி, இதில் எண்ணற்ற நன்மைகள் நிறைந்துள்ளன. குறிப்பாக கோடையில் உடலுக்கு வேண்டிய நீர்ச்சத்துக்களை இது தன்னுள் அதிகம் உள்ளடக்கியுள்ளது. மேலும் உடலின் கனிமச்சத்து மற்றும் சர்க்கரையின் அளவை சீராக வைத்து, சுறுசுறுப்புடன் செயல்படுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

அதுமட்டுமின்றி, இதில் வைட்டமின் பி, இரும்புச்சத்து, கால்சியம், ஜிங்க், பொட்டாசியம் போன்ற பல்வேறு சத்துக்களும் உள்ளது. அதிலும் கோடையில் அதிகப்படியான வெப்பத்தினால் சின்னம்மை வரும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அப்போது நுங்கு சாப்பிட்டால், சின்னம்மையினால் ஏற்படும் அரிப்புக்களை தடுத்து, உடலை குளிர்ச்சியுடன் வைத்துக் கொள்ளலாம். இதுப்போன்று நுங்குவில் நிறைய சத்துக்கள் நிறைந்துள்ளன.

அதுமட்டுமின்றி நுங்கு பல்வேறு நோய்களுக்கு அரு மருந்தாகவும் விளங்குகிறது. அந்த வகையில் ஒரு சில நோய்களுக்கு எவ்வாறு மருந்தாக பயன்படுகிறது என்று பார்ப்போம்

**எடையை குறைக்கும்:** கோடையில் மிகவும் ஈஸியாக உடல் எடையைக் குறைக்கலாம். ஏனெனில் இக்காலத்தில் உடல் எடையை குறைக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அதில் ஒன்று தான் நுங்கு சாப்பிடுவது. நுங்கு சாப்பிட்டால், அதில் உள்ள அதிகப்படியான தண்ணீரானது வயிற்றை நிரப்பி, அடிக்கடி பசி ஏற்படுவதைத் தடுக்கும்.

**மார்பக புற்றுநோய்:** நுங்குவில் ஆந்தோசை யனின் என்னும் பைட்டோ கெமிக்கல் உள்ளது. இவை மார்பக புற்றுநோய் செல்கள் மற்றும் கட்டிகளின் வளர்ச்சியை தடுக்கும் சக்தி கொண்டவை.







**சின்னம்மை:** சின்னம்மை வராமல் தடுக்க வேண்டுமானாலும் சரி, வந்த சின்னம்மையை விரைவில் குணப்படுத்தவும் சரி, நுங்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

**வெயிலால் ஏற்படும் மயக்கம்:** சிலருக்கு வெயிலில் செல்லும் போது அடிக்கடி மயக்கம் போடுவார்கள். அத்தகையவர்கள் நுங்கு அதிகம் சாப்பிட்டால், உடலின் நீர்ச்சத்து அதிகரித்து, மயக்கம் ஏற்படுவது குறையும்.

**கர்ப்ப காலம்:** கர்ப்பிணிகள் நுங்கு சாப்பிட்டால், செரிமானம் அதிகரிப்பதுடன், மலச்சிக்கல் மற்றும் அசிடிட்டி போன்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம்.

**நீர்ச்சத்தை அதிகரிக்கும்:** நுங்குவில் நீர்ச்சத்து அதிகம் உள்ளது. எனவே கோடையில் உடலில் வறட்சி ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், நுங்கு சாப்பிடுங்கள்.

**வயிற்று பிரச்சனைகள்:** வயிற்றில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளைப் போக்க வேண்டுமானால், நுங்கு சாப்பிடுங்கள்.

**சோர்வு:** கோடையில் விரைவில் சோர்வடைந்துவிடுவோம். இத்தகைய சோர்வை நுங்கு சாப்பிட்டால் தடுத்துவிடலாம்.

**செரிமான பிரச்சனைகள்:** செரிமான பிரச்சனை உள்ளவர்கள், நுங்கு சாப்பிட்டு வந்தால், அது செரிமான மண்டலத்தை சீராக செயல்பட வைத்து, செரிமான பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்கும்.

**மலச்சிக்கல்:** மலச்சிக்கலால் அவஸ்தைப்படுபவர்கள், காலையில் வெறும் வயிற்றில் நுங்கு சாப்பிட்டால், மலச்சிக்கல் பிரச்சனையில் இருந்து விடுபடலாம்.

**கல்லீரல் பிரச்சனை:** கல்லீரலில் உள்ள டாக்ஸின்களை வெளியேற்றி, கல்லீரலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள நுங்கு பெரிமும் உதவியாக இருக்கும். ஏனெனில் இதில் பொட்டாசியம் அதிகம் உள்ளது.

**உடலை குளிர்ச்சியாக்கும்:** கோடையில் உடலின் வெப்பமானது அதிகரிக்கும். இத்தகைய வெப்பத்தை நுங்கு சாப்பிடுவதன் மூலம் தணிக்க முடியும்.

**வியர்குரு:** நுங்கு சாப்பிட்டால், உடல் வெப்பம் குறைந்து, உடலில் வந்துள்ள வியர்குரு போய்விடும்.

**வெயில் கொப்பளம்:** கோடையில் பலருக்கு வெயில் கொப்பளம் வரும். இத்தகைய கொப்பளத்தை வராமல் தடுக்க, நுங்கு சாப்பிடுங்கள்.

**குமட்டல்:** குமட்டல் உணர்வைத் தடுக்க எலுமிச்சை உதவவில்லை என்றால், நுங்கு சாப்பிடுங்கள். இது குமட்டலைத் தடுக்கும்.

**ஆற்றலை அதிகரிக்கும்:** நுங்குவில் உள்ள சரியான கனிமச்சத்துக்களும், ஊட்டச் சத்துக்களும், உடலின் குளுக்கோஸ் அளவை சீராக வைத்து, உடலை சுறுசுறுப்புடன் வைத்துக் கொள்ள உதவிப் புரியும்.



# கண் திருஷ்டி

திருஷ்டி என்பதை நமது முன்னோர்கள் மிகவும் நேர்த்தியாகவும், ஒருவித சாங்கியமாகவே கையாண்டனர். ஆனால் காலப்போக்கில் ஒருசில விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தில் நமது முன்னோர் கடைபிடித்த பல்வேறு நல்ல செயல்கள் மறைந்து விட்டன. மறைந்து விட்டன என்பதைவிட நாம் எந்தவித ஆர்வமுமின்றி அவற்றை மறந்து விட்டோம் என்றே கூறலாம். ஆனாலும் விஞ் ஞானத்தின் உச்சத்தில் இருந்தாலும், தற்போது நமது முன்னோர் செய்த ஒவ்வொரு செயலிலும் இருந்த காரண காரியங்கள் தற்போதுதான் ஒவ்வொன்றாக நமக்கு விளங்குகிறது. அதன் காரணமாகவே நாம் தற்போது முன்னோர் விட்டு சென்ற பல அரிய பழக்க வழக்கங்களை தோன்றி துருவி ஆராய்ச்சி செய்து அவற்றை கடைபிடிக்க எத்தனித்துள்ளோம்.

அந்த வகையில் நமது குழந்தைகளுக்கு பெரியவர்கள் வகுத்த மருந்தில்லா மருத்துவம்தான் திருஷ்டி. “கல் அடி பட்டாலும் கண் அடி படக் கூடாது” என்று முன்னோர் வகுத்து பாது காத்த அரிய மருந்து என்றே சொல்லலாம். தொட்ட தற்கெல்லாம் மருத்துவர்களை நாடாமல், ஒருசில பாதிப்புகளை வெறும் திருஷ்டி கழிப்பதன் மூலமே நமது முன்னோர் மருந்தில்லாத மருத்துவமாக திருஷ்டியை பயன்படுத்தினர்.

ஒருவயது கூட நிறைவடையாத குழந்தையை வெளியாட்களிடம் கொடுக்க கூடாது. ஜலதோஷம் இருப்பவர்களுடன் இருந்தால் எப்படி நமக்கும் ஜலதோஷம் பிடித்து கொள்கிறதோ அதுபோல, கண்திருஷ்டி சட்டேன்று குழந்தைகளுக்கு பாதிப்பை கொடுத்துவிடுகிறது. பெற்ற தாயாக இருந்தாலும் அவர்களின் கண் திருஷ்டியும் குழந்தையை பாதிக்கும். அதற்காக குழந்தையை கண்ணே மணியே என்று கொஞ்சாமல் இருக்க முடியுமா? அல்லது ஆசையாக சுற்றத்தார்கள் கேட்கும் போது கொடுக்காமல்தான் இருக்க முடியுமா? ஆகவே குழந்தையின் நெற்றியிலும், இடது கன்னத்திலும் கருப்பு மையால் பொட்டு வைத்தால் திருஷ்டி அந்த குழந்தைக்கு அண்டாது.

அதனால்தான் இன்றுவரை வீதி உலா வரும் இறைவனுக்கும் இறைவிக்கும் கன்னத்தில் திருஷ்டி பொட்டாக மை வைத்து அழைத்து வரும் வழக்கம் உள்ளது. இறைவனாக இருந்தாலும் கண்திருஷ்டி தாக்கும். இதற்கு பரிகாரம் கருப்பு மைதான் என்கிறது கண்திருஷ்டி சாஸ்திரம்.

## பல்வேறு திருஷ்டியை போக்கும் பசு

பசுவின் பாத மண்ணுக்கு சக்தி வீட்டில் ஆறு மாதத்திற்கு ஒருமுறையாவது பசுவை இல்லத்திற்கு அழைத்து வந்து கோபூஜை செய்தால் அந்த இல்லத்தில் இருக்கும் கிரக தோஷங்கள் விலகும். பசுவின் பின்பக்கம் அதாவது அதன் வால் பகுதியை தொட்டு வணங்கினால் யோகம் ஏற்படும். “உன்னை பின் பக்கம் வணங்குபவர்களுக்குதான் யோகம் கிட்டு“ என்று பசுவை பார்த்து சீதாபிராட்டி கூறியதாக புராணத்தில் இருக்கிறது. வாழும் வீட்டில் கண்களுக்கு தெரியாத தோஷங்கள், தீய சக்திகளும் நிறைந்து இருக்கும் என்கிறது சாஸ்திரம் அதனால் பசுவின் உடலில் பல தேவர்களும் ரிஷிகளும், தெய்வங் களும் இருப்பதாக புரா ணம் கூறுகிறது. அந்த பசுவின் பாதத்தில் ஒட்டி இருக்கும் மண், அந்த இல் லத்தில் பதிந்தால் தோஷங்கள் விலகி சந்தோஷம் பெருகும்.பசுவை இல்லத்திற்கு அழைத்து வர முடியாத வர்கள் பசு சாணத்தை சிறிது தண் ணீரில் கலந்து வாசப்படியில் தெளித் தாலும் கண்திருஷ்டியும், பூமி தோஷங்களும் விலகும். அத்துடன் பொறாமைக்காரர் களின் காலடிபட்ட இடம் பட்டுபோகும் என்பார்கள் பெரியோர்கள். அப்படி பட்டு போகாமல் அந்த தீய பார்வை யை விரட்டும் ஆற்றல் பசுக்கும் அதனின் சாணத்திற்கும் சக்தி இருக்கிறது.



## தருமருக்கு ஏற்பட்ட திருஷ்டி

திருஷ்டிபட்டு கட்டைவிரல் கருப்பானது பாண்டவர்கள் வனவாசத்தையும், யுத்தத்தையும் நல்லபடியாக முடித்துவிட்டு வெற்றியுடன் எல்லோரிடத்திலும் ஆசி பெற்று கொண்டு இருந்தார்கள். துரியோதனனின் தாயான காந்தாரியிடமும் ஆசிபெறறார் தருமர். காந்தாரி கண்களை கட்டி கொண்டு இருந்தாலும் கண்களின் கீழ் அதாவது கண்களை கட்டிய துணியின் இடுக்குகளின் வழியாக தருமனின் கால் கட்டை விரலை பார்த்து, “இனி இந்த காலுக்குதான் பொன்னையும் பொருளையும் கொட்டுவார்கள்” என்று கூறி கொண்டே பெருமூச்சுவிட்டாள். என்ன ஆச்சரியம்,? நிலகரியை போல தருமரின் கால் கட்டை விரல் கருப்பாக மாறியது. இப்படி பொறாமையால் விடும் பெருமூச்சும் திருஷ்டியாக உருவெடுக்கும்.

## கட்டைவிரலை பாதிக்கும் திருஷ்டி

உடலுக்கு ரத்த ஒட்டம் சீராக இருக்க வேண் டும் என்றால் சிலர் அக்குபிரஷர் செருப்பை போடுவார்கள். அதனால் நடக்கும்போது பாதத்தில் ரத்த ஒட்டம் நன்றாக இயங்கும். பாதத்தில் ரத்த ஒட்டம் நன்றாக இருந்தால் உடலில் இருக்கும் மற்ற உறுப்புக்கும் ரத்த ஒட்டம் சீரானதாக இருக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். அதேபோலதான், முதலில் கண் திருஷ்டி காலுக்கே படும். நம் உடலில் எப்பொழுதும் ஏதாவது அடிபட்டு கொண்டே இருந்தாலும் அல்லது தீராத உடல் உபாதைகள் இருந்தாலும், கால் கட்டை விரலின் நகத்தில் கருப்பு மை வைத்தால் திருஷ்டி அண்டாது. கட்டை விரலின் நகத்தை ஆரோக்கியத்தின் கண்ணாடி என்கிறார்கள் நம் முன்னோர்கள்.



ஆன்மிகமலர் மெயில் புக்

BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com
SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,
89394 99598
New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.

மனித வாழ்வு மேம்படுவதற்காக

# உங்களை பழிப்பவர்களை நேசியுங்கள்

பாகம் 6



## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

பரமஹம்ஸர் கூறுகிறார்: "தவறுசெய்பவர்கள் மீது கருணையையும் அன்பையும் பொழியுங்கள். உங்கள் அன்பு புரிந்துகொள்ளப்படவில்லையென்றால், நீங்கள் நேசிப்பவர் உங்களை விட்டு பிரியக்கூடும். ஆனால் வாழ்வின் இறுதிநாள்வரை உங்களுக்குத் தவறிழைத்தது அவரே என்பதை நினைவுகூர்வார். நீங்கள் நேசிப்பவர்களின் நினைவில் வெறுப்பானவராக வாழ்வதைவிட அவர்கள் இதயத்தில் நிபந்தனையற்று அவர்களை நேசித்தவராக வாழ்வது மேன்மையாகும்."

பரமஹம்சர் மேலே கூறிய கருத்து சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வினைக் கூறுகிறார்: "ஒருமுறை ஓர் இந்திய மகானும் ஒருசில சீடர்களும் கங்கைக் கரையில் நீராடிக்கொண்டிருந்தபொழுது மற்றொரு மனிதன் வந்து புனிதமான மகானின் அருகில் தனது குதிரையை கழுவத் தொடங்கினான். அந்த அடாவடி மனிதன் தனது குதிரையை கவனித்துக்கொண்டிருக்கையில் மகானின்மீது தண்ணீரை வீசியடிப்பதில் வேண்டுமென்றே கவனமின்றி இருந்தார். கோபமடைந்த சீடர்கள் அடாவடிக்காரனை அடிக்க விரும்பினர். ஆனால் அவர்களது குரு கூறினார், "வேண்டாம், அவனை விட்டுவிடுங்கள்." திடீரென்று குதிரை தனது எஜமானனை அவனது பற்களை உடைத்தவண்ணம் உதைத்துத் தள்ளியது. அந்த மகான் அங்கே சென்று அடிபட்ட மனிதனுக்கு அன்புடன் உதவிபுரிந்தார். இயற்கையின் இரக்கமற்ற விதிமுறைகளே தவறு செய்தவனை தண்டித்துவிட்டது. மகான் அல்ல, இறைவனும், அவனது பிரபஞ்ச விதிமுறைகளும் எவருடைய செயல்கள் என்றும் இசைந்திருக்கின்றனவோ அவர்களுடைய நன்மைக்காகவும், அகத்தே உள்ள தெய்வீக ஆன்மாவிற்கு உண்மையாக இல்லாதவர்களை துன்பத்தின் மூலமாக விழித்தெழச்செய்வதற்காகவும் தவறாமல் வேலை செய்கின்றன."

"இறைவனை தேடுங்கள்" என்று குருதேவர் கூறுகிறார்: "நீங்கள் பூவுலகிற்கு அனுப்பப்பட்டது உங்களுடைய முந்தைய பிறவிகளிலிருந்து, நீங்கள் கொண்டுவந்திருக்கும் தீய சுபாவங்கள் மற்றும் பழக்கங்களை அழிக்க கடுமுயற்சி செய்வதற்கும், மேலும் தற்போதைய பிறவியில் இனி எதையும் உருவாக்குவதைத் தடுப்பதற்கும் ஆகும். இதன்மூலம் நீங்கள் இறைவனை காணலாம். அதன்பின் நீங்கள் "இறைவா, எனது வாழ்வின் நோக்கம் நிறைவேறிவிட்டது. உனக்கு சேவை செய்ய நான் வரவேண்டும் என்று நீ விரும்பினாலன்றி, நான் மீண்டும் திரும்பி வரத்தேவையில்லை," என்று கூறி இவ்வாழ்விலிருந்து வெளியேற முடியும். அடக்கி வென்றவனுக்காக நான் இறைவனின் ஆலயத்தில் ஒரு தூண் வைப்பேன். மேலும், அவன் இனியும் வெளியே செல்லமாட்டான்."

நீங்கள் முயற்சி செய்தால் இறைவனை காண் பீர்கள் பரமஹம்சர் கூறுகிறார்: "இறைவனை வேறு எவரும் ஒருபோதும் உங்களுக்குக் கொடுக்க முடியாது. நீங்கள் உங்களுடைய சுயமுயற்சியை மேற்கொண்டாலன்றி அவன் ஏன் உங்களிடம் வருவான்?. நீங்கள் உங்களுடைய முழு இதயத்துடனும் முழுமனதுடனும் முழு ஆன்மாவுடனும் இறைவனிடம் அன்பு செலுத்தவேண்டும். நீங்கள் அவனை நூறு சதவிதம் விரும்புகிறீர்கள் என்று காண்பிக்கவேண்டும். அதன்பின் அவன் வருவான். இவ்வாழ்வில் உணர்கின்ற இறைவனுக்கான ஆசையை நிச்சயமாக உங்களுடைய முந்தைய வாழ்வில் பெற்றிருந்தீர்கள். இதை நான் உண்மையாக உங்களுக்குக் கூற முடியும். ஆனால் இப்போது உங்களுக்கு இறைவனுக்கான உற்சாகம் அதே அளவு இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அந்த ஆசை வளர்ந்து நிறைவேறவேண்டுமென்றால், நீங்கள் அதற்கு ஊட்டமளிக்கவேண்டும். நீங்கள் எப்பொழுது இவ்வாழ்விலிருந்து பறித்துக்கொள்ளப்படுவீர்கள், மீண்டும் ஓர் ஆதரவற்ற குழந்தையாக முதலிலிருந்து தொடங்கவேண்டும் என்று உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு மீண்டும் எல்லையற்ற பரம்பொருளின் மீதான ஆசை வரும்முன் வருடங்கள் ஒடிவிடும்."

அவர் தொடர்ந்தார்: "உங்களில் எத்தனை பேர் நேர்மையான ஆன்மீகமுயற்சியை மேற்கொள்கிறீர்கள்? நீங்கள் எனது சொற்பொழிவை கேட்கிறீர்கள். ஆனால் நீங்கள் உண்மையில் இறைவனை அறிய முயற்சி செய்கிறீர்களா? நீங்கள் உண்மையாகவே முயற்சி செய்தால் அவனை அறிந்துகொள்வீர்கள். அதற்கு நேரமும் விடாப்பிடியான நம்பிக்கையும் தேவை; "இறைவா நீ எனது பிரார்த்தனையை கேட்டுக்கொண்டிருக்கின்றாய் என்று எனக்குத்தெரியும்." அவன் கேட்டுக்கொண்டிருக்கவில்லை என்றெண்ணி, நீங்கள் அவனை அழைப்பதை நிறுத்தினால், அதுவே உங்களுடைய முடிவு. நீங்கள் இப்பூவுலகில் கனவில் நடப்பதைப் போல நடந்துகொண்டிருக்கிறீர்கள். நமது உலகம் ஒரு கனவுக்குள் ஒரு கனவு; நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டியது, இறைவனை காண்பதே ஒரே லட்சியம், ஒரே குறிக்கோள். அதற்காகவே நீங்கள் இங்கே இருக்கின்றீர்கள். அவனைக் காண வேண்டும், அவனை இடையறாது தேடிக்கொண்டிருப்பதன் மூலம் மனதில் உறுதிப்பாடு, வாழ்வில் இணக்கம், மனப்போக்கில் சமநிலை ஆகியவற்றின் மூலம்; விவேகத்தின் பாதையில் கற்பதன் மூலம்; மற்றவர்களிடம் இல்லாமல், உங்களிடமே குறைகாண்பதன் மூலம் பணிவுடன் இருத்தல், உங்கள் நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எப்போதும் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல், அனைத்து இதயங்களின் நேர்மையை

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

போற்றுதல், நல்லவர்களுக்கு எப்பொழுதும் ஒத்துழைத்தல் மற்றும் தீயவர்களை எதிர்த்தல், மற்றவர்களுக்கு உதவுதல், பாதை நெடுகிலும் பலத்தையும் புரிந்துகொள்ளுதலையும் அளித்தல் ஆகியவற்றின் மூலம் உங்களால் அவனை அறிய முடியும் இதுதான் இராஜ வழியில் வாழ்வ தாகும். இறைவனிடம் அழைத்துச்செல்லும் உண்மையான வழி. உலகத்தின் அங்கீகாரம் ஒரு பொருட்டல்ல; உங்களது சொந்த உணர்வு நிலையிடம் ஒப்புதல் பெறுங்கள். மேலும் அதில் நீங்கள் இறைவனின் அங்கீகாரத்தைப் பெறுவீர்கள். சுய திருப்தியடைதலும் முன்னேற சிறிதளவு முயற்சி செய்தலும் அல்லது செய்யா திருத்தலும் தேக்கத்தை அளிக்கின்றன. ஆனால், நீங்கள் இறைவனுடன் இருக்கின்றீர்கள் என்று உங்களுக்கு நிச்சயமாகும் வரையிலும் முன்னேறுவதற்கு இடை விடாது முயற்சி செய்தலே வாழும் வழியாகும்.”

குருதேவர் அதற்கான ஓர் உதார ணத்தை எடுத்துக்காட்டுகிறார்

அவர் தொடர்ந்தார்: “எனவே, ஒருபுறம் இறைவனைக் காண்பது மிகவும் கடினமான விஷயம். இருப் பினும் நீங்கள் உளமார்ந்தும் மன உறுதியுடனும் இருந்தால் அது மிக எளிதானது கூட ஆகும். மிகப்பெரிய கோவில்கள் மற்றும் நன்கு திட்ட மிடப்பட்ட சமயப்பேருரைகளால் இறை வன் கவரப்படுவதில்லை. இயந்திரத் தனமான உறவுமுறையின் வழியே அவன் அறியப்பட முடியாதவன். இதயத்திலிருந்து எழும் ஒரு மன மார்ந்த அழைப்பிற்கு அவன் பதிலளிக்கிறான். இறைவனை உணர்ந்தறிய தயங்காத மன உறுதி தேவை. “யார் என்னை எல்லா வற்றிலும் கண்டு எல்லாவற்றையும் என்னிடத்தில் காண்கிறானோ, அவனுடைய காட்சியினின்று நான் மறைவைதில்லை, அவனும் என் காட்சியினின்று மறைவதில்லை. நான் எனது பக்தனுடன் கண்ணாமூச்சி விளையாடுகிறேன். அவன் என்னை கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது நான் அவனை கவனித் துக்கொண்டிருக்கிறேன்.

மனிதனுடைய பேராவல்களுக்குப் பின்னால் நான் ஒளிந்துகொள்கிறேன். ஆனால் எனது பக்தன் “இறைவா, எனது ஆசையை நான் பின்தொடர்ந்து செல்லும்பொழுதும்கூட அவற்றின் பின்னே உன் னையே நாடிக்கொண்டிருக்கிறேன். ஒருநாள் எனது பக்திவலையில் நீ பிடிபட்டுவிடுவாய்” என அவன் கூறுகையில், ”நான் பதிலளிக்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.”

பிறரை பழிப்பதற்கு எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருக்கின்ற மற்றும் பிறரை பழிவாங்கும் காலம் இது. மற்றவர்களுக்கு எவ்வாறு தீங்கிழைக்கலாம் என்றும் எந்த வழியில் ஒருவனை படுகுழியில் தள்ளிவிடலாம் என்றும் எண்ணுகின்ற காலம் இது. அன்புக்கு “கிலோ என்ன விலை?” என்று கேட்கும் காலம் இது. “உங்களை பழிப்பவர் களை நேசியுங்கள்” என்றுகுரு தேவர் கூறுகிறார். இறை வனை நேசிப்பவர்கள் நேர் மையான வழியில் நடப்பர்; அவர்கள் பிறரையும் நேசிப் பர். இன்றைய காலத்தில் எவரேனும் மற்றொருவரை பழித்தால் பதிலுக்கு பல மடங்கு பழிப்பவர்கள்தான் ஏராளம்.

இடப்பக்கம் திரும்பி னால் கொலைசம்பந்தப்பட்ட தகவல்; வலப்பக்கம்திரும்பி னால் கொள்ளை சம்பந் தப் பட்ட தகவல்; பின்பக்கம் பார்த்தால் பாலியல்பலாத்காரம், முன்பக்கம் திரும்பினால் ஏமாற்றுதல் போன்ற நேர் மைக்கு மாறான தகவல்களை கேட்டு மனம் மிகவும் வாடிய நிலையில் மனிதர்கள் வாழும் காலம் இது. இவ்வாறான நிலையில் மனிதன் எப்படி நிம்மதியாகவும் மகிழ்ச் சியாகவும் வாழ முடியும்? மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்றால் ஒரே ஒரு வழி மட்டும்தான் உள்ளது. குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகனந்தர் அருளியுள்ள வழிமுறை களை பின்பற்றினால் நிச்சயம் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம் என்பது உறுதி. “இறைவனை காணமுயற்சித்தல்; இறைவனை எப்பொழுதும் சார்ந்திருத்தல்; மனதில் அவனைப் பற்றிய எண்ணங்கள் போன்றவைதான் மனித னுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவது மட்டுமின்றி அவனுடைய வாழ்க்கையில் இறைவனுக்கும் அவனுக்கும் இடையேயான எல்லா தடைகளையும் அகற்றிவிடுவான் இறை வன். வாழ்வில் ஏற்படுகின்ற சங்கடங்கள் அனைத்

**யார் என்னை எல்லாவற்றிலும் கண்டு எல்லாவற்றையும் என்னிடத்தில் காண்கிறானோ, அவனுடைய காட்சியினின்று நான் மறைவைதில்லை, அவனும் என் காட்சியினின்று மறைவதில்லை. நான் எனது பக்தனுடன் கண்ணாமூச்சி விளையாடுகிறேன். அவன் என்னை கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது நான் அவனை கவனித்துக் கொண்டிருக்கிறேன்**







தையும் அகற்றுவான். மனிதன் இறைவனுடன் இருப் பானேயானால், இறைவனும் மனிதனுடன் இருப்பான். அதற்கான ஆதாரத்தையும் அவன் வெளிப்படுத்துவான். அதற்கான ஓர் உதாரணத்தைக் காட்டுகின்ற கதை ஒன்று கீழ்க் கண்டவாறு உள்ளது:

## எருவாட்டிக்குள் கேட்ட குரல்

ஒரு சமயத்தில் பக்த துக்காராம் என்ற ஞானி ஒருவர் ஒரு வீதியின் வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். வீதியிலே இரண்டு பெண்கள் மிகவும் ஆவேசத்துடன் வரிந்து கட்டிக்கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த துக்காராம் அவர்கள் நடுவில் சென்று நின்று அவர்களைச் சமாதானப்படுத்தினார். ‘உங்களுக்குள் எதன் பொருட்டு சண்டை?’ என்னால் தீர்க்கமுடியுமானால் நான் தீர்க்கிறேன்.’ என்று கூறினார். அந்த இரு பெண்களில் ஒருவள் கூறினாள், “நானும் இவளும் பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரிகள்தான். நல்ல தோழிகளும் கூட. தினமும் காலையில் எழுந்தவுடன் பசுஞ்சாணத்தை எடுத்து எருவாட்டி தட்டுவோம். அதன்படியே இன்றும் அதிகப்படியாகத் தட்டி னோம். காயவும் வைத்தோம். காய்ந்த பிறகு வீட்டுக்குக்கொண்டு செல்லலாம் என்றெண்ணி வீட்டுக்குச் சென்றுவிட்டோம். திரும்பி வந்து பார்க் கும் பொழுது எங்கள் இருவருடைய எருவாட்டியும் ஒன்றாக இருக்கிறது. யாரோ விளையாட்டுப் பையன்கள் ஒன்றாகக் கலந்துவிட்டார்கள்.

இப்பொழுது என் எருவாட்டி எது, இவள் எருவட்டி எது என்று தெரியவில்லை! அவளும் நானும் சமமாக எருவாட்டியைப் பிரித்துக்கொள்ளலாம் என்று கூறினாலும் இவள் ஒப்புக்கொள்ள மறுக்கிறாள். அவள் தட்டிய எருவாட்டி மட்டும் தனக்கு போதும் என்கிறாள். காரணம் கேட்டால், பக்தியுடன் தட்டிய என் எருவாட்டிகளே போதும் என்கிறாள்!. அதுதான் சண்டைக்குக் காரணம் என்றாள். “அப்படியா” என்று கேட்டார் துக்காராம். “ஆம் ஸ்வாமி, நான் இடையறாது அந்த பண்டரீநாதனையே நினைப்பவள். என்னுடைய எல்லா செயல்களிலும் “விட்டல்” என்ற என் பாண்டுரங்கன் கலந்திருக்கிறான். அந்த பாண்டுரங்கனின் எருவாட்டியே எனக்கு போதும்; வேறு வேண்டாம்!” என்றாள் அவள்.

உடனே துக்காராம் அந்த எருவாட்டிகளுக்கு அருகே உட்காந்தார். ஒரு எருவாட்டியை எடுத் துக் காதோரம் வைத்துக் கேட்டார். “நீ எருவாட்டி தட்டும்போதுகூட “விட்டல், விட்டல்” என்று கூறுவதுண்டா?” என்று கேட்டார். “உண்மைதான் ஸ்வாமி!” என்று ஒப்புக்கொண்டாள் அவள். அதன்பின் ஒவ்வொரு எருவாட்டியையும் எடுத்து காதோரம் வைத்து இரண்டையும் பிரித்தார். “இதோ உன் குவியல். உன் விட்டலின் குரல் இந்த எருவாட்டியிலும் ஒலிக்கிறது.” “இதோ உன் குவியல்”, இதில் எவ்வித சப்தமுமில்லை என்று கூறி இருவருக்கும் அவரவர்கள் தட்டிய எருவாட்டியைச் சரியாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு துக்காராம் தன் வழி சென்றார். இவ்வாறு இறைவனுடனுள்ள சகவாசம், மேன்மையையும் அத்துடன் நன்மையையும் அளிக்கிறது என்பது புலனாகிறது.

அனைத்தும் ஒளி, அனைத்தும் ஆனந்தம்,
அனைத்தும் அமைதி, அனைத்தும் அன்பு,
அனைத்தும் அவனே!

உறுதிமொழி

ஒவ்வொரு எண்ணம் மற்றும் செயலாகிய கோயிலில் உன்னை நான் காண்பதற்கு எனக்கு அருள் புரிவாய். அகத்தே உன்னைக் கண்டபின், புறத்தே அனைத்து மனிதர்களிலும், அனைத்து சூழ்நிலைகளிலும் உன்னை நான் காண்பேன்!

மீண்டும் மலரும்

குருப்ரியா செல்.நெ: 9894595909

# குலதெய்வ வழிபாடு

தன் ஆன்மீக முன்னேற்றத்திற்கு எந்த தெய்வ வழிபாடு அவசியமோ, அந்த குறிப்பிட்ட தெய்வத்தை வழிபடும் குடும்பத்தில் ஒருவன் பிறக்கிறான். எனவே ஒன்று முதல் இரண்டு மணி நேரமாவது, நாம் நமது குலதெய்வ நாமத்தை ஜபம் செய்யவேண்டும். போகப்போக, தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு, ஒருவரது குலதெய்வம், ஸ்ரீமகாலக்ஷ்மிதேவி என்றால், அவர் 'ஸ்ரீமகாலக்ஷ்மிதேவி தேவ்யை நமஹ' என்று ஜபம் செய்ய வேண்டும்.



திருமணமான பெண், தனது கணவரின் குடும்பத்தின் குல தெய்வத்தை வழிபட வேண்டும். குலதெய்வம் என்னவென்று தெரியா திருந்தால், 'ஸ்ரீகுலதேவதாயை நமஹ' என்று ஜபிக்க வேண்டும்.

கடவுளின் நாமஜபம் மற்றும் மந்திரஜபத்தின் ஒரு அறிமுகம்:

மந்திரம் என்றாலே பலருக்கு ஒரு வித வசீகரம் ஏற்படுகிறது. பெரும்பாலான நேரங்களில் அது கடவுளின் நாமஜபத்திற்கு இணையாகப் பயன்படுத்தப்படுகிறது. இவை இரண்டுமே, ஒரு எழுத்து, ஒரு வார்த்தை மந்திரம், அல்லது ஒரு வாக்கிய மந்திரமாகவோ இருப்பதால், ஒன்றை மற்றொன்றாகத் தவறாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும், ஆன்மீக அறிவியலின் படி, பலவகைகளில் இரண்டுமே வெவ்வேறானவை.

மந்திரஜபம், நாமஜபம் இவை இரண்டுக்கும் உள்ள ஒப்பிடு:

## மந்திரஜபத்தின் வரையரை:

மந்திரத்திற்கு பலவித வரையறைகள் உள்ளன. பொதுவாக சொன்னால், மந்திரம் என்பது ஒரு எழுத்து, ஒரு ஒலி, ஒரு சொல் அல்லது பல சொற்கள் அடங்கிய, ஆன்மீக உண்மையை விளக்கும்படியான அல்லது கடவுளின் ஒரு குறிப்பிட்ட தன்மையை விளக்குகின்ற ஒன்று. மந்திரத்தை ஜபம் செய்வதால் ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் அல்லது ஒரு குறிப்பிட்ட வேண்டுதலை நிறைவேற்றிக்கொள்ளவும் முடியும். மந்திரத்தை திரும்பத்திரும்பச் சொல்லும்பொழுது ஒருவர் சில விதிகளை, சில கட்டுபாடுகளை, சில நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மந்திரம் மற்றும் மந்திர யோகத்தில் இது ஒரு முக்கியமான வழிவகை.

## கடவுளின் நாமஜபத்தின் வரையறை:

நாமஜபம் என்பது கடவுளின் பெயரைத் திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டிருப்பது. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நாமஜபம் செய்யப்படுவதால், இதற்கு எந்த விதிகளோ, நெறிமுறைகளோ, கட்டுப்பாடுகளோ கிடையாது. நாமஜபத்தின் முக்கியக்குறிக்கோள், கடவுளின் பெயரில் உள்ளார்ந்து இருக்கும் தெய்வீக சக்தியை தன்னுள் ஈர்த்து ஆன்மீகத்தில் முன்னேறுவதுதான். அதனோடுகூட, நாமஜபம் என்பது ஒருவரது ஆன்மீகப் பயணத்தில் எதிர்மறைச் சக்தியினால் ஏற்படும் இடைஞ்சல்களிலிருந்து பாதுகாக்கும் சக்தி வாய்ந்த கவசமாகும்.

www.aanmeegamalar.com



## குலதெய்வ நாமஜபத்தால் மூலாதாரச் சக்கரம் தூண்டப்படுவது ஏன்?

குலதெய்வமானது ஆண் தெய்வமாகவோ, பெண் தெய்வமாகவோ, சைவத்தை சார்ந்த தெய்வமாகவோ, அல்லது வைணவத்தைச் சார்ந்த தெய்வமாகவோ இருக்கலாம். சிலருக்கு ஆண் பெண் உடனுறை குலதெய்வமாகவும், சிலருக்கு ஆண் அல்லது பெண் தெய்வமோ குல தெய்வமாக இருக்கும்.



ஒவ்வொரு யுகத்திலும் மக்கள் இலகுவாகப் பின்பற்றக்கூடிய, குறிப்பிட்ட ஆன்மீகப் பயிற்சியை குறிப்பிட்ட யுகத்துக்கென்று கடவுள் வகுத்துள்ளார். முற்காலத்தில், நன்மை தரக்கூடிய விதிகள், நெறி முறைகள் மற்றும் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு மந்திர ஜபம் செய்ததை போலல்லாமல், இப்பொழுது நம் வாழ்க்கை முறை நிறையவே மாறுபட்டுள்ளது. நம்மைச் சுற்றியுள்ள இன்றைய மாசுபட்ட ஆன்மீகச் சூழலும், அதிவிரைவான வாழ்க்கைப்போக்கும், நீண்ட நேரம் தியானம் மற்றும் வழிபாட்டு சடங்குகள் (கர்மகாண்டம்) போன்ற மற்ற ஆன்மீகப் பாதைகளைப் பின்பற்றி, ஆன்மீக முன்னேற்றமடைய இன்றைய காலத்தில் வரம்புகள் பல உள்ளன. இந்த கலியுகத்தில் ஆறு அடிப்படைத் தத்துவங்களின்படி ஆன்மீகத்தில் விரைவாக முன்னேற மகான்கள் மற்றும் ஆன்மீகத்தில் பெரும் நிலை அடைந்தவர்களும் நாமஜபத்தையே பின்பற்றும்படி பரிந்துரைகின்றனர்.

## ஆன்மீக வளர்ச்சிக்கு குல தெய்வத்தின் நாமஜபம்:

கடவுளின் நாமஜபம், மந்திரஜபம் இரண்டுமே ஒரு எழுத்து, ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கிய மந்திரமாக இருப்பதால், ஒன்றை மற்றொன்றாகத் தவறாக எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவற்றிடையே பல வேறுபாடுகள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது மந்திரஜபத்தில் கைக்கொள்ள வேண்டிய சில உயர் நிலைக் கட்டுபாடுகள். இத்தகைய கட்டுபாடுகள் நாமஜபத்திற்கு கிடையாது என்பதால் அதனை மேற்கொள்வதென்பது எளிதாகிறது.

கடவுளின் நாமஜபம், மந்திரஜபம் இரண்டுமே ஆன்மீக முன்னேற்றத்திற்கான வழிவகைகளைக் கொண்டுள்ளன. எனினும், இந்த இரண்டில், இக்கலியுகத்தில் ஆன்மீக வளர்ச்சிக்கு மிக ஏதுவாக இருப்பது கடவுளின் நாமஜபம் என்று பரிந்துரைக்கப்படுகின்றது.

ஒரு மகானோ அல்லது குருவோ ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை ஜபம் செய்யும்படி சொன்னாலன்றி, நமது விரைவான ஆன்மீக வளர்ச்சிக்கு குலதெய்வ நாமஜபமே சிறந்தது.

தகவல் : சனாதனின் நூல் 'நாமஜபத்தின் முக்கியத்துவமும் நன்மைகளும்',
தொடர்பு : 9380949626

www.aanmeegamalar.com




**ஆதியோகி சிலை 112 அடி உயரமும்
650 டன் உலோகத்தால் உருவாக்கப்படும்போது
எடுக்கப்பட்ட புகைப்படம்**








# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம்
இலவச இதழாக வெளிவரும்
நமது இதழில் ஆன்மிக நாட்டமும்
விருப்பமும் உள்ள அன்பர்கள்
வரவேற்கப்படுகிறார்கள்.
உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள்,
மகான்கள், சித்தர்கள், இந்துமத
சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**
(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)
**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது
வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம்.
தெரியாதவர் தெரிந்து கொள்ள
எங்கள் பயணத்தில் நீங்களும்
இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# பாரதப்பூமியின் செழிப்பிற்கு காரணமான பசு

பசுவை தேனு என்று அழைப்பார்கள். இதற்கு அர்த்தம் “கொடுப்பவள்”. பசுவின் கொடுக்கும் இயல்பு அளவு கடந்தது. இந்த பாரத பூமி மிகவும் சிறப்போடு இருந்ததற்கு பசுவும் ஒரு காரணம். பசு தாய்க்கு சமம். நாம் இந்த உலகில் எதை எதையோ சுமந்து பிறகு எதையும் தேடாமல் ஒரு நாள் சாம்பல் ஆகி விடுகிறோம் முதலில் ஞாபகம் வையுங்கள். பசுவுக்கும் நம் முன்னோர்களுக்கும் இருந்த நெருக்கம், அதன் மீதான அக்கறை, இன்று நம்மிடம் இல்லை.

காவல் துறை அதிகாரி ஒருவர் என்னிடம் சொன்ன செய்தி. தெருவில்சுற்றும் பசுவைப் பிடித்துக் கொன்று, பின் சந்தைகளில் விற்று பணம் சம்பாதிக்கும் கூட்டம் பெருகிவிட்டது. எத்தனைபெரிய அட்டூழியம்.

இது எல்லா இடங்களிலும் தொடர்ந்து நடக்கிறது என்று எத்தனை பேருக்கு தெரியும்? தெரிந்திருந்தாலும் இதன் மீது அக்கறைக் கொண்டு செயல்படுவோர் எத்தனை பேர்? மிகவும் குறைவு. தான் தனது என்ற எண்ணத்தோடே எல்லோரும் இருக்கிறோம். படைப்பை மறந்து விட்டோம்.

பசுவின் தாயினும் மேல் ஆனது. பசு ஆரோக்கியமாக இருக்கும் சூழலில் அமைதியும் மற்றும் வளமையும் சேர்ந்து இருக்கும். ஆன்மீக பாதையில் மேலே செல்ல பசுவிற்கு பணிவிடை செய்வதை விட வேறு புண்ணியம் இல்லை. நாம் சிவனை வணங்குகிறோம் ஆனால் சிவன் வாகனத்தை போற்றுவதில்லை. பாபர் ஹுமயுனுக்கு இட்ட கட்டளை, “பசு வதை இஸ்லாத்திற்க்கு எதிரானது. இந்த நாட்டில் இருக்கும் இரு மதங்களில் நம்பிக்கையை ஒரே நேரத்தில் கெடுக்கும். எனவே பசுக்களைக் கொள்ளக் கூடாது”.

இதற்கு முந்தைய யுகங்களில், போரில் வெற்றிப் பெற்றவர், வெற்றிப் பெற்ற நாட்டில் இருந்து ஆநிரைகளை கவர்ந்து செல்வர்கள். ஏன்?. ஏன் என்றால் எத்தனை பசு/மாடு ஒருவர் வைத்திருக்கிறார், என்பதை வைத்தே அவர் செல்வத்தை அளவிட முடியும். பசு இருக்கும் இடத்தில் வளமையும் தன்னிறைவும் வந்து சேரும். பசுக்களின் அதிகப்படியான எண்ணிக்கை நம் நாட்டின் வளமையைச் சொல்லும். இதனால் தான் நம் கலாசாரத்தை அழிக்க நினைத்தவர்கள், நம் நாட்டில் பசு இறைச்சி ஆலைகளை முதலில் உருவாக்கினார்கள். நம் மீதான









போரை முதலில் பசு வதையில் இருந்து தொடங்கினார்கள். அவர்களுக்கு தெரிந்து இருந்தது, எப்போது நம் பசு இனங்கள் அழிகிறதோ அப் போது நம் கலச்சாரம் முற்றிலும் அழிந்து விடும். ஆனால் இன்றைய நாட்களில் நாம் அவர்களுக்கு வேலை கொடுப்பதே இல்லை. ஏன் என்றால் நாமே நம் வளங்களை அழிக்க ஆரம் பித்து விட் டோம். நம் பசுக்களை உண வில்லாம் தெருவில் சுற்ற விடுகிறோம். அவை மக்காத பிளாஸ்டிக் போன்ற கழிவுகளை உண்டு, பின் செரிமானம் ஆகாமல் மிக துயரமான நிலையில் இறந்து விடுகிறது. நமக்கு இங்கு என்ன நடக் கிறது என்பது கூட தெரிந்துக் கொள்ள ஆர்வம் இல்லை.

இடம் சார்ந்த ஒவ்வொரு உயிரையும் கொல்ல கொல்ல நாட்டில் அமைதி குறைந்து கொண்டே போகும். நமக்கு மகிழ்ச்சி என்றால் என்ன வென்றே தெரியாமல், எப்போதும் துயரத்தையே சுமந்துக் கொண்டு இருக்கிறோம். ஐஸ்வர்யம் என்பது நாம் எவ்வளவு பொருள் வைத்திருக்கிறோம் என்பதில் இல்லை. நம்மால் எவ்வளவு மன நிறைவுடன், அமைதியான வாழ்க்கை வாழ முடியுமோ அது தான் ஐஸ்வர்யம். இன்றைய தினத்தில் எத்தனை பேர் இப்படி வாழ்கிறார்கள்? ஒருவரும் இல்லை. ஏன் என்றால், நாம் நம் வேத கலாச்சாரத்தையே (கர்மா, யாக்ய, சேவை) மறந்து விட்டோம். நீங்கள் யாக்ய செய்யாத போது, பசுவை பேணாத போது, எப்படி நீங்கள் வேத கலாச்சாரத்தை சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியும். ஒன்று முடிந்தால் அடுத்து என்று பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் நம் நாட்கள் கழிகிறது. படைப்பின் உடைய விதிகளை நாம் பின் பற்ற ஆரம்பிக்காத வரை இதற்கு முடிவே இல்லை. அது வரை படைப்பு உங்களுக்கு மேலும் சுமை தந்து கொண்டே இருக்கும்.

காட்டு மிராண்டிகள் என்பவர்கள் அதிகப் படியான குளிர் அல்லது பாலைவன பிரதேசத்தை சேர்த்தவர்களாக இருப்பார்கள். அங்கே தானிய உணவு உற்பத்தி என்பது சாத் தியக் குறைவு. அதனால் தான் அவர்கள் விலங்குகளைக் கொன்று உண்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு கர்மா, யக்யா, பசுவை பேணுவது இவைகளைப் பற்றி அறிவு செய்வது நம் கடமை. ஆனால் நாம், இதை எதையும் செய்யாமல், இறந்த பின் சொர்கத்திற்கு போகலாம் என்ற சொப்பனத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அப்படி ஒன்று உங்களுக்கு நடக்க போவதில்லை. இதை உணர்ந்து கொண்டு நீங்கள் செயல்பட ஆரம்பித்தால் படைப்பில் நல்ல மாற்றம் ஏற்படும். இல்லையேல், இன்னும் துன்பகரமாக மாறிவிடும்.

தியான் அஷிரமத்தில் சூர்யா சாதனா செய்யும் ஒருவர். அவர் பக்கத்துக்கு வீட்டில் பிரபலம் ஒருவர் வசிக்கிறார். அவர் தினமும் அதிகாலையில் புகையை உண்டு பண்ண அவர் வீட்டு வேலைக்காரருக்கு கட்டளை இட்டு உள்ளார். சூரிய சாதனா செய்ய அதிகாலையில் செல்லும் இவருக்கு புகையினால் சுவாசிப்பது சிரமமாக இருந்தது. இவர் இதை பற்றி சொல்லியும், அவர்கள் கேட்கவில்லை. இது தான் கலியுகத்தில் அடையலாம். இப்படி அசுர குணங்கள் மனித உருவில் செயல்படும். இந்த அசுர புத்தி யாகம், தவம், யோகம், சாதனா இவைகளுக்கு கெடுதல் செய்யவும், ரிஷி முனிகளை தொந்தரவு செய்யவும் தயாராக இருக்கும். நாம் முற்றிலும் மாசு பட்டக் காற்றை சுவாசித்துக் கொண்டு இருக்கிறோம். உங்களை சுற்றி இருக்கும் மரங்கள் தான் உங்களைக் காப்பாற்றுகிறது. மாசுப் பட்ட காற்றினால் தான் நாம் நோய்களை அதிகமாக சந்திக்கிறோம். இதை புரிந்துக் கொண்டு நீங்கள் விழித்துக் கொள்ள வில்லை என்றால் இன்னும், மோசமான நிலைக்கு ஆளாக நேரும்.

தியான் அஷிரம சாதகர்களால் இந்த முழுவதும் ஆபத்து நிலையில் இருக்கும் பசு மற்றும் மாடுகளை பராமரித்து வருகிறோம். இந்த முழுவதும் 22 கோசலை மூலம் 15□□□ கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். எங்களுடன் சேர்ந்து நீங்களும் சேவை செய்யலாம். மேலும் யோகா கற்றுக் கொள்ள அணுகவும். : 9841430369.
www.dhyanfoudation.com

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

# உலகில் தோன்றிய ஒரே கர்மயோகி

# கௌதம புத்தர்



விவேகானந்தர் கர்மயோகத்தைப் பற்றி அதிகமாக சொற்பொழிவாற்றியுள்ளார். அந்த வகையில் அவர் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு சிறு பகுதியை பார்ப்போம்.

"கர்மயோகத்தை உண்மையிலேயே தமது அன்றாட வாழ்வில் கடைப்பிடித்த ஒரு மனிதரைப்பற்றி மட்டும் கூறுகிறேன்.

அவர் புத்தர், கர்மயோகத்தை முழுமையாக நடைமுறையில் கொண்டுவந்தவர்கள் யாராவது இருந்தால் அது கண்டிப்பாக புத்தராக மட்டுமே இருப்பார்.

அவரைத் தவிர உலகின் அனைத்து மகான்களையும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் தாங்கள் இறைவனின் அவதாரங்கள் என்றும், மற்றொரு பிரிவினர் தங்களை செயல் படுவதற்கான தூண்டுசக்தியை வெளியிலிருந்தே பெற்றார்களாகவும், அதாவது வெளியிலிருந்து பிரதிபலனையும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் கடவுளைப் பற்றிய பல்வேறான உங்கள் கொள்கையைப்பற்றி எனக்குக் கவலையில்லை, ஆன்மாவைப் பற்றிய நுட்பமான கோட்பாடுகளையெல்லாம் விவாதித்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? நன்மை செய், நல்லவனாக இரு! அது உனக்குச் சுதந்திரத்தைத் தரும்.

சத்தியம் என்பது எதுவாக இருந்தாலும் பிறருக்கு நன்மை செய் சத்தியத்திடம் அது உன்னை அழைத்துச் செல்லும் என்று கூறிய ஒரே மகான் புத்தர்தான்.

முற்றிலும் எந்தவித சுயநல நோக்கமும் இல்லாமல் வாழ்ந்தவர் புத்தர். அவரைவிட அதிகமாகச் செயல்புரிந்தவர்தான் யார்? எல்லோரையும்விட இவ்வளவு உயரத்தில் திளைத்த ஒருவரை உலக வரலாற்றில் எனக்குக் காட்டுங்கள். இத்தகைய ஆழ்ந்த தத்துவ ஞானமும் இவ்வளவு பரந்த இதயமும் கொண்ட ஒரே ஒருவரை மட்டுமே மனிதகுலம் இதுவரை தோற்றுவித்துள்ளது. இந்த மகத்தான தத்துவ ஞானி மிகவுயர்ந்த தத்துவத்தை உபதேசித்தார்.

அதேவேளையில் மிகச் சாதாரணமான விலங்குகளிடமும் ஆழ்ந்த இரக்கம் உடையவராக இருந்தார். அவர் தனக்காக எந்தத் தனி உரிமையையும் கோரவில்லை. அவர்தான் முழுக்க முழுக்க எந்தவிதமான தூண்டுதல்களும் இல்லாமல் செயல்பட்ட லட்சியக் கர்மயோகி. இதுவரை பிறந்தவர்களுள் மாமனிதர் என்று அவரை மனித வரலாறு காட்டுகிறது.

ஒப்புவமை இல்லாத அளவிற்குக் கனிவும் அறிவும் அவரிடம் சங்கமித்திருந்தது. இத்தகைய சங்கமத்தை இதுவரை பூமி கண்டதில்லை. இதுவரை வெளிப்பட்டவற்றுள் மகோன்னதமான ஆன்ம சக்தியின் நிலைக்களன் அவர். உலகம் முதன்முதலாகக் கண்ட மாபெரும் சீர்திருத்தவாதி அவர். சாஸ்திரங்கள் கூறுகின்றன என்பதற்காக ஒன்றை நம்பாதீர்கள். உங்கள் தேசிய பாரம்பரியம் என்பதற்காக நம்பாதீர்கள்! சிறு வயதிலிருந்தே உங்களுக்கு உபதேசிக்கப்பட்டது என்பதற்காக நம்பாதீர்கள்! உங்கள் அறிவால் ஆராய்ந்து பாருங்கள்! பகுத்து உணர்ந்துகொண்ட பிறகு, அது எல்லோருக்கும் நன்மை தரும் என்று கண்டால் அதனை நம்புங்கள். வாழ்வில் அதைச் செயல்படுத்துங்கள். மற்றவர்களும் அதைப் பின்பற்ற உதவுங்கள் என்று முதன் முதலாகத் துணிவுடன் முழங்கியவர் அவர்.

பணமோ, புகழோ வேறு எந்தப் பிரதிபலனையுமோ எதிர்பார்க்காமல் யார் வேலை செய்கிறார்களோ, அவர்களே சிறப்பாக வேலை செய்ய முடியும். அப்படிச் செயல்புரிய முடியும்போது அவன் புத்தராகி விடுகிறான். உலகத்தையே மாற்றிவிடக்கூடிய அளவு வேலை செய்வதற்கான ஆற்றல் அவனிடமிருந்து பொங்கி எழுகிறது. கர்மயோகத்தின் மிகவுயர்ந்த லட்சியத்தின் பிரதிநிதியாக அவன் விளங்குகிறான்."

என்று புத்தரைப் பற்றி விவேகானந்தர் மிகுந்த பெருமையுடன் கூறியுள்ளார்.

நன்றி: விவேகானந்தர் விஜயம்





# ஆஸ்துமா

ஆஸ்துமா என்ற சொல் கிரேக்க மொழிச் சொல்லாகும். மருத்துவத்தில் மிகப் பெரும்பாலான உடல் நோய்களுக் கான சொற்கள் கிரேக்க மொழி சொற்களாகும். ஆஸ்துமா எனும் கிரேக்கச் சொல்லுக்கு மூச்சிரைப்பு, மூச்சு வாங்குதல் என்று பெயர்.

நுரையீரல் மூச்சு குழல்கள் பகுதியில் ஏற்படும் பாதிப்புகளே ஆஸ்துமாவை உண்டாக்குகிறது. மூச்சுக் குழல்கள் சளியால் அடைப்போ, சினியா எனப்படும் சவ்வில் ஏற்படும் அழற்சி யினாலோ ஆஸ்துமா ஏற்படலாம். ஆஸ்துமாவில் பலவகைகள் உண்டு.

ஆஸ்துமாவை முழுமையாகக் குணப் படுத்தும் அற்புதத்திறன் கண்டங்கத்தரிக்குஉண்டு.

“நித்திய கண்டம் பூரண ஆயுள்’ இந்தப் பழமொழிக்கு ஏற்ப இந் நோய் பாதித்தவர்கள் அவதிப்படுவர். அதாவது தான்படும் தினசரி வேதனையானது மரணத்திற்கு ஒப்பானது. ஆனால் பூரண ஆயுளுடன்இருப்பதாகவும் அர்த்தமாகிறது.

இவ்வளவு வேதனையான இந் நோய்க்கு நமது முன்னோர் எளிமையான வைத்தியத்தை கடைப்பிடித்துள்ளனர்.

கண்டங்கத்திரி இலை, பூ, காய், வேர் ஆகிய வற்றை வகைக்கு 20 கிராம்எடுத்துக் கொள்ள வும். இத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்த ரத்தை,அதிமதுரம், சீரகம், சோம்பு, கடுஞ் சீரகம், ஜாதிக்காய், சடாமாஞ்சில்,சதகுப்பை, ஓமம், மாசிக்காய், கற்கடகசிருங்கி, ஏலக்காய், கடுக்காய்,இந்துப்பு, பச்சைக் கற்பூரம் (இவை அனைத்தும் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்) போன்றவற்றை வகைக்கு பத்து கிராம் கலந்து, அனைத்தையும் தூள் செய்து பத்திரப்படுத்தவும்.

இதில் ஐந்து கிராம் அளவுபொடியை எடுத்து இரண்டு டம்ளர் (400 மிலி) நீருடன்சேர்த்து கொதிக்க வைத்து, பாதியாகச் சுண்டச் செய்து சிறிது பனங்கற்கண்டுசேர்த்துச் சுவையாக, காலை, மாலை இருவேளையும் தொடர்ந்து சாப்பிட்டு வர,சளி, இருமல், ஆஸ்துமா, மூச்சிரைப்பு, தலைவலி, தலை பாரம், தும்மல், மூக்கடைப்பு, பசியின்மை போன்ற அனைத்து குறைபாடுகளும் நீங்கி, நித்தியசௌக்கியம் மற்றும் பூரண ஆயுளுடன் வாழலாம்.

ஆஸ்துமா நோய் பல்வேறு வகையில் பிரிக்கலாம் அதில் முக்கியமானவைகள்:

1. காற்றுக் குழல் ஆஸ்துமா (Bronchial Asthma):

   மூச்சுக் குழாயின் அளவு குறுகி விடுவதால், சளி அடைப்பு ஏற்பட்டு, மூச்சு இரைப்பு உண்டாகும்.

2. இருதய ஆஸ்துமா (Cardiac Asthma):

   இருதயத்தின் இடது வென்டி ரிக் கிள் குறைபாடுகள் காரணமாக தோன்று கிறது.

3. வெளி ஆஸ்துமா (External Asthma):

   தூசி, புகை, வாசனை திரவியங்கள், இரசாயனங்கள் போன்ற வைகள் காரணமாக அழற்சி ஏற்பட்டு தோன்றும் மூச்சிரைப்பு.

4. உள் ஆஸ்துமா (Internal Asthma):

   கோபத்தை அடக்குதல், பயம், உடலுறவுக்குப் பின் மூச்சிரைப்பு, தன் குடும்பத்தினரிடம், விருப்பமானவர் களிடம் தவறுகளை சுட்டிக் காட்ட முடி யாமல் அடக்கி வைப்பது, மாணவர்கள் ஆசிரியர்களைக் கண்டு பயப்படுதல், சில மருமகள்கள் மாமியாருடன் இருக்கும் போது ஏற்படும் மன பயம், அல்லது மாமியாருக்கு மருமகளைக் கண்டு பயம் என பலவித உணர்ச்சி தடுமாற்றத்தால் ஆஸ்துமா வருவதுண்டு. மேலும் பரம்பரைத் தன்மையினாலும் ஆஸ்துமா தோன்றும்.

ஆஸ்துமா நோயாளிகளுக்கு உணவு கட்டு பாடு தேவை. ஆஸ்துமா நோயாளிகளுக்கு சீரணமண்டலத்தில் ஹைட்ரோ குளோரிக் அமிலம் மிக குறைவாக சுரக்கின்றது. எனவே சீரணத்தன்மை பாதிப்பு ஏற்படுவதால் அதிக உணவு உண்பதால் சீரணமாகாது. வாந்தி மற்றும் வயிறு உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

பொதுவாக இரவு நேரங்களில் சீரணமண்டல செயல்கள் மிகவும் குறைவாக இருக்கும். ஆஸ்துமா நோயாளி கள் இரவு நேரங்களில் எளிதில் சீரணமாகக் கூடிய எளிய உணவுகளை, குறைவாகவே உண்ணவேண்டும். குறிப்பாக தயிர், மோர் உணவுகளை தவிர்க்க வேண்டும்.

## மலையில் கிடைக்கும் விபூதி!

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள படவேடு திருத்தலத்தில் உள்ளது ஸ்ரீரேணுகாம்பாள் கோயில். இங்கே, பக்தர்களுக்கு வழங்கப்படும் விபூதி விசேஷமானது என்கின்றனர் கோயில் ஊழியர்கள்.

அருகில் உள்ள மலையில் இருந்து எடுத்து வரப்படும் விபூதியை பிரசாதமாகத் தருகின்றனர். மலையில் கமண்டல நதியின் உற்பத்தி ஸ்தானத்தில், இரண்டு பக்கமும் மண் மேடாக காட்சி தருகிறது.

இங்குதான் ஜமதக்னி முனிவர் தவம் புரிந்து, யாகம் நடத்தினாராம்! இந்த இடத்தில் உள்ள மண், விபூதியைப் போன்றே இருப்பது சிறப்பு! ஒவ்வொரு ஆனி மாத உத்திரத்தின் போது, சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு விபூதியை எடுத்து வந்து பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குகின்றனர்.

இந்த விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டால், தீராத வியாதிகள் தீரும். துஷ்ட சக்திகள் விலகி ஓடிவிடும். மங்கலகாரியங்கள் தடையின்றி நிகழும் என்பது ஐதீகம்!


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# அரிய மருந்தான விபூதியும் அதன் அற்புத பலனும்



அறுகம்புல்லை உண்ணுகின்ற பசுமாட்டின் சாணத்தை எடுத்து உருண் டையாக்கி வெயிலில் காயவைக்க வேண் டும். பின் இதனை உமியினால் மூடி புடம் போட்டு எடுக்க வேண்டும். இப்போது இந்த உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும். இதுவே உண்மையான திருநீறாகும்

## விபூதி இட்டுக் கொள்ளும் இடங்களும், பலன்களும்

1. புருவ மத்தியில் (ஆக்ஞா சக்கரம்) வாழ்வின் ஞானத்தை ஈர்த்துக் கொள்ளலாம்.
2. தொண்டைக்குழி(விசுத்தி சக்கரம்) நமது சக்தியை அதிகரித்துக் கொள் ளலாம்.
3. நெஞ்சுக்கூட்டின் மையப்பகுதி தெய்வீக அன்பைப் பெறலாம். மேலும், பூதியை எடுக்கும் போது, மோதிரவிரலால் எடுப்பது மிகவும் சிறந்தது. ஏனென்றால், நம் உடலி லேயே மிகவும் பவித்ரமான பாகம் என்று அதைச் சொல்லலாம். நம் வாழ்வையே கட்டுப்படுத்தும் சூட்சுமம் அங்கு உள்ளது.

## சந்தனம்,விபூதி,குங்குமம் எல்லாம் எதுக்காக..?

நம் உடலின் அனைத்து நாடி நரம்பு களும் மூளையுடன் இணைக்கப் பட்டுள்ளன. உடலின் அநேக நரம் புகள் நெற்றிப் பொட்டின் வழியாகச் செல்கின்றன. ஆகவே நெற்றிப் பகுதி அதிக உஷ்ணமாகவே இருக்கும். நம் அடிவயிற்றில் நெருப்பு சக்தியிருக்கிறது. ஆனால் அந்த சூட்டின் தாக்கம் அதிகமாக உணரப் படுவது நெற்றிப் பொட்டில்தான். அதனால்தான் காய்ச்சல் என்றால் நெற்றியில் கைவைத்து உஷ்ணத்தின் தன்மையை அறிகிறோம். வாகனங்க ளின் எஞ்சின் தொடர்ந்து இயங்கும்போது அதிகம் சூடாகும். இந்த சூட்டைக் குறைத்து எஞ்சினுக்கு அதிக ஆயுளைக் கொடுப்பது ரேடியேட்டர். அதுபோல நமது மூளையையும், அதை இணைக்கும் நரம்புகளையும் குளிரச் செய் வதே நாம் நெற்றியில் பூசும் சந்தனக்குழம்பு செய்யும் தலையாய கடமை.

தலையில் ஏற்படும் வியர்வை, தலை மேல் விழும் பனித்துளிகள் மற்றும் தண்ணீர் போன்றவற்றின் சிறுபகுதி கெட் டிப்பட்டுத் தலைப் பகுதியில் தங்கிவிடும். இதனால் தலைவலி, தூக்கமின்மை ஏற்படும். இப்படிப்பட்ட கெட்ட நீரை உறிஞ்சி வெளியேற்றவே விபூதி தரிப்பதன் நோக்கம். நெற்றிப்பகுதி அதிக சூடாவதால் கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. கிருமித் தொற்றைத் தடுக்கவே மஞ்சள்; அதிலிருந்து தயாரிக்கப்படும் குங்குமம். குங்குமம், சந்தனம், விபூதி ஆகிய மூன்றும் சிறந்த கிருமிநாசினிகள். அதை மறந்து பெண்கள் இன்று மஞ்சள், குங்குமத்தை ஒதுக்கி வருகின்றனர். பெரும்பாலான பெண்கள் ஸ்டிக்கர் பொட்டையே நம்பியிருக்கிறார்கள். ஸ்டிக்கர் பொட்டு உடல்நலனுக்குக் கெடுதியே செய்யும். அதில் தடவியிருக்கும் ஒட்டும்பசை ரசாயனத்தால் ஆனது. இது நெற்றியில் எரிச்சலை ஏற்படுத்தும். மற்றும் சூரிய ஒளி நெற்றிப் பொட்டில் விழுவதைத் தடுத்துவிடும். கண் மற்றும் புருவங்களுக்கு ஸ்டிக்கர் பொட்டு ஆபத்தானது.



ஆன்மிகமலர்
மெயில் புக்

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# உடல் வரை எல்லை கட்டி வாழ்வது நரகம்
# இறைநிலையே என்று வாழ்வது சொர்க்கம்

நாம் இந்த உலகில் பிறந்தவுடன் தாயைக் காண்கின்றோம். பின் அவர் தந்தையை அறிமுகப் படுத்துகிறார். அதன் பிறகு நமக்கு குரு அருள் கிட்டுகின்றது. அவர் மூலமாக இறை நிலை தெளிவு பெறுகிறோம்.

அன்னையும் தந்தையும் தானே பாரில் அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம். பிறகு நம் பதிவின் காரணமாக குருவருள் கிட்டுகின்றது. (இங்கே பதிவுகள் என்றால் ப்ராப்த கர்மம் என்று பொருள்). நாம் பிறந்தது முதல் இன்று வரை செய்த பாவ புண்ணிய காரியங்களல் வரும் பதிவுகள்.

சஞ்சித கர்மம்: நம் தாய் தந்தையர் முன்னோர்கள் செய்த பாவ புண்ணியங்களின் பலனாக வரும் பதிவுகள்.

ஆகாமிய கருமம்: இந்த இரு பதிவுகளின் பலனாக இனி நாம் செய்ய இருக்கும் செயல்கள்.



குரு என்றால் கு + ரு

கு = குற்றங்கள், குறைகள், நம்மிடம் பதிந்து இருப்பது.

ரு = நீக்குபவர்

குரு என்ற நிலை பலப் பல உள்ளன

காரிய குரு: அவருக்கு வேண்டிய காரியங்கள் நம் உதவியால் நடக்கும் என்றால் அவர்கள் நம்மை சீடனாக ஏற்பார்கள்.

மத குரு: மதங்களின் கோட்பாடுகளை மட்டுமே போதிக்க நம்மை சீடனாக ஏற்பார்கள்.

சமய குரு: சமயங்களில் உள்ள கோட்பாடுகளை போதிப்பவர்கள்.

இந்து மதத்தில் சமயங்கள் ஆறு: சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்யம், கௌமாரம், காரண குரு, பல காரணங்களுக்காக சீடர்களை ஏற்பார்கள். ஆஸ்ரமத்தை சுத்தம் செய்ய, தோட்டம் பராமரிக்க மற்றும் பல தேவைகளுக்காக.

சத்குரு என்றால் சத்+சித்+ஆனந்தம் = சச்சிதானந்தம். சத் என்றால் இறைநிலையின் உண்மையான விளக்கத்தை நமக்கு தெளிவாகவும் எளிமையாகவும் விளங்கிக் கொள்ளும் அளவிற்கு விளக்கம் தருபவர் இதை சங்கம் மூலமாக (சத்சங்கம்) தெளிவுபடுத்துபவர். சித் என்றால் அறிவு, உயிர் என்பர்.

அனந்தம் என்பது எங்கும் வியாபித்து இருப்பது.

அந்த வகையிலே ஒரு மனிதன் பிறந்து வாழத் தெரியாமல் வாழும் நேரத்தில் தக்க சமயத்தில் வாழும் நெறிமுறைகளையும் இறைநிலை விளக்கத்தையும் தருபவர் குரு.

மனித வாழ்க்கை மூன்று கட்டங்களாக உள்ளது. 1. விதியின் காலம். 2. மதியின் காலம், 3. கதியின் காலம்

விதியின் காலம் என்பது நாம் நம் குடும்பத்தில் குழந்தையாக பிறந்து வளர்கிறோம். அங்கே தாய் தந்தையருக்கு 56 பிள்ளைகள் இருந்தால் அங்கே பொருளாதார குறைவோடு இருந்தால் நம்மை பள்ளிக்கு கூட அனுப்ப மாட்டார்கள். வேறு குடும்பத்தில் செல்வ செழிப்பான குடும்பத்தில் பிறந்த குழந்தையை நன்றாக படிக்க வைப்பார்கள். ஆனால் படிப்பு ஏறுவது அவர்களுக்கு சிரமமாக இருக்கலாம்.

இப்படி விதியின் காலம் நம் அறிவு சிந்தித்து முடிவு எடுக்கும். காலம் வரை இருக்கும்.

மதியின் காலம் நாம் தெளிவாக சிந்தித்து ஆராய்ந்து முடிவு செய்யும் நிலைக்கு உயர்ந்து பொருள் துறையிலும் அருள்துறையிலும் உயர்ந்து நல்ல மனைவி மக்களை பெற்று வாழ்வது.

கதியின் காலம் இப்படி குடும்பத்தில் ஈடுபட்டு கடமைகளை செய்து பணி ஓய்வு பெற்ற பிறகு வரும் காலம்.

அந்த வாழ்நாளில் நாம் செய்த பாவ புண்ணிய செயல்களின் படி நாம் அனுபவிக்கும் இன்ப, துன்ப அமைதி பேரின்ப நிலையாகும்.

**தன்னை அறிந்து தன் நிலையில் நிலைத்து வாழும் தனிக் கருணை குருவடைந்து அன்னை வயிற்று உருவாய் உடலாய் வந்த ஆதி உருவை உன் புருவத்தில் உணர்த்தி பின் நீ அதில் நிலைக்க உன் பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும்.**

**வேதாத்திரி மஹரிஷி**

எனவே நமக்கு தக்க சமயத்தில் நல்ல குரு கிடைத்து இருந்தால் விதி, மதி, கதியின் காலங்களை வென்று அமைதி காணலாம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மதியாய் விதியாய்
கதியாய் வருவாய் அருள்வாய் குஹனே ..

– கந்தர் அனுபூதி

குரு அருளால் நம்மிடம் உள்ள குறைகள், விலங்கினப் பதிவுகளை நீக்கும் பயிற்சிகள் கிடைக்கும்.

விலங்கின பதிவுகள் என்றால்

பிறரை வதைப்பது, பிறர் பொருட்களை தனதாக்குவது, பிறரை கொலை செய்தல், பிறரின் வாழும் சுதந்திரத்தை பறிப்பது.

மேற்கண்ட விலங்கினப் பதிவுகள் நம்மை விட்டு நீங்க கண்டிப்பாக குரு தேவை.

தியானம் செய்து செய்து கருமையத்தில் உள்ள களங்கங்களைப் போக்கலாம்.

துணியில் பட்ட கறையை போக்க சோப்பு போடுகின்றோம். பாத்திரங்களில் ஒட்டும் சாம்பார் ரசம் கறைகளை துலக்கும் ரசாயனகளை உபயோகித்து சுத்தம் செய்கிறோம். தரையை டெட்டால் போட்டு துடைக்கிறோம். ஆன்மாவில் உள்ள களங்கத்தை போக்க தவத்தால் மட்டுமே முடியும்.

இதை சத்குரு வேதாத்திரி மஹரிஷியின் அருளினால் மட்டுமே செய்ய முடியும். கடவுளைப் பற்றியும், சொர்க்கம், நரகம் பற்றி அவர் மேலும் மிக அழகாக கூறுகிறார்.

இறைநிலைத் தெளிவு:

இன்று மக்கள் சமுதாயத்தில் பல பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் இறைநிலைத் தெளிவு இல்லாமையே. இதை சத்குரு தெளிவு படுத்துகின்றார். கட + உள் = கடவுள். மனதின் ஒரு முனையில் இருந்து ஆழமாக கடந்து உள்நோக்கிச் சென்று பயிற்சி செய்வது நாம்

சிறு வயதில் வாழும் கால கட்டத்தில் நம் முன்னோர்கள் இறைவனுக்கு உருவம் காட்டியும், அச்சமூட்டியும், ஆசை காட்டியும் விளக்கினர்.

நீ பாடம் படிக்காவிட்டால் நீ சொல் பேச்சைக் கேட்காவிட்டால் சாமி கண்ணை குத்திவிடும் என்று அச்சமூட்டியும், நீ சொல்வதெல்லாம் செய்தால் கடவுளே உனக்கு அது கொடுப்பார், இது கொடுப்பார் என்று ஆசை வார்த்தைகளை சொல்லுவர். இதைதான் சொர்க்கம், நரகம் என்றார்கள்.

உடல் வரை எல்லை கட்டி வாழ்வது நரகம். இறைநிலையே என்று வாழ்வது சொர்க்கம். இதுவே பக்தி மார்க்கம் என்பது. அறிவு அறிவுக்கு அடிமையாவது பக்தி. அறிவு அறிவை அறிய பழகுதல் யோகம். அறிவு அறிவை அறிவது முக்தி.

எனவே உண்மையான இறை நிலையை உணர வேண்டுமானால் அதற்கு ஒரு பயிற்சி வேண்டும். அதுவே தவம், உன்னையோ கடவுளையோ அறிய வேண்டுமானால் ஒரு குறுக்கு வழியுண்டு. தன்னை அறிந்து தன் நிலையில் நிலைத்து வாழும் தனிக் கருணை குருவடைந்து அன்னை வயிற்று உருவாய் உடலாய் வந்த ஆதி உருவை உன் புருவத்தில் உணர்த்தி பின் நீ அதில் நிலைக்க உன் பேதமற்ற நிலை கடவுளாகி நிற்கும். என்று வேதாத்திரி மஹரிஷி மிக அழகாக கூறுகிறார்.

உண்மையான கடவுள் நம்மிடமே உள்ளது அதுவும் அறிவாக. இதை அறிய உணர்ச்சி நிலையில் இருந்தால் அதை காண முடியாது.

நமது மன அலைச் சுழல் 14 முதல் 40 / வினாடி நிலையில் இயங்குகிறது. இதற்கு BETA WAVE என்று பெயர். இந்த நிலையில் மனிதன் விலங்காக செயல்படுகின்றான். பஞ்சமா பாதகங்களை செய்வான். எனவே நெற்றியில் மனம் வைத்து தவம் செய்ய செய்ய மன அலச்சுழல் 8 முதல் 14 / second. என்ற ALPHA LEVEL மேலும் தவம் செய்ய செய்ய 4 முதல் 7 / second என்ற THEETA அலைசுழலாகவும் மேலும் தவம் செய்து இருக்க 1 முதல் 4 per second என்ற DELTA LEVELலில் அமையும்.

இந்த நிலையில் மனிதன் தெய்வ நிலைக்கு வந்து விடுகிறான்.

மனிதன் (ஆணவம்+கண்மம்+மாயை) = தெய்வம்.

மனதின் அலை நிலை குறையக் குறைய மும்மலம் அழியும். மனிதனே தெய்வமாகிறான்.

மனிதப் பண்பு = பிறருக்கு கொடுத்து வாழ்வது.

தெய்வப் பண்பு என்பது யாரைப் பார்த்தாலும் அன்பும் கருணையும் ஏற்படுவது.

ஒரு மாமரம் அதில் பூ பூத்து பிஞ்சாகிறது அந்த பிஞ்சு பெருத்து பெரியதாக ஆக ஆகக் காம்பும் பெரியதாகி அதை விடாமல் பாதுகாக்கும். இதுவே அன்பு.

கருணை என்பது அந்த பெருத்த மாம்பழத்துக்கு சுவையும் இனிப்பும் மரம் தருவது.

இது போல் ஓர் அறிவு தாவரமாகிய மாமரத்துக்கு தெய்வ பண்பு உள்ளது. ஆனால் மனிதனிடம் இல்லை.

மதம் = ஆணவம் + கன்மம் + மாயை.

அது நம்மிடத்தில் இருந்து ஒழிந்தால் நாமே கடவுள் நிலைக்குப் போகிறோம். ஒரு நாணயத்தை அண்டாவில் போட்டு நீரை கலக்கினால் அதில் உள்ள நாணயம் தெரியாது. நீர் தெளிந்த நிலையில் நாணயமும் அதில் உள்ள எழுத்தும் தெரியும்.

சூரியனை மேகம் மறைக்கும் போது வெளிச்சம் இல்லை. மேகம் விலகினால் ஒளி வரும். அது போல் நம்மிடம் உள்ள மன அலைச்சுழலைக் குறைத்தால் நம்மிடம் உள்ள இறை நிலை தெரியும்.

எனவே மனதை அலை பாயாமல் நிலைத்து தவம் செய்தால் நம்மிடம் உள்ள இறை நிலை தெரியும். இதையே மகரிஷி அவர்கள் அலை அலையாய் இயங்கும் மனத்து அடித்தளமே நிலை பொருள் அது தெய்வம். கடல் அலை போன்றதே மனம்.

நிலை பொருளாம் இருப்பு சிவம் நித்தியம் என்று ஓதிடும் நெடுவெளி உனது அறிவாகும் உனது அலையே மனம், (அலை அலையாய்) கலை உணர்வால் மெய்ப் பொருளாம் கண் காணா ஒன்றினை கண், காது, மூக்கு, முகம், குணம் உருவம் புகுத்தியே சிலை உருவில் காட்டிச் சொன்ன கதைகளை மயங்கி நாம் சிக்கி உள்ள வரையில் நிலை விளங்காது மாயையாய் என்று வேதாத்திரி மஹரிஷி கூறுகிறார்.

அருள்நிதி V.K.சுப்ரமணியன்
நிர்வாக அறங்காவலர் சாலிக்கிராமம்
மனவளக்கலை மன்ற அறக்கட்டளை,
Mobile 9962385093





## மருத்துவரால் கைவிடப்பட்டவர்களுக்கு கை கொடுக்கும்

# பாடைக்காவடி மாரியம்மன்

மழையின்றி உலகம் இல்லை. மாரியல்லாது காரியம் இல்லை. எனவே ஊர்தோறும் மாரியம்மனுக்குக் கோயில் உண்டு. கோடை தோறும் விழாவும் உண்டு. யார் கடன் இருந்தாலும் மாரி கடன் செலுத்த மக்கள் மறப்பதில்லை.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வரதராஜம்பேட்டை மகாமாரியம்மன். பாடைக்காவடி மாரியம்மன் என்ற பெயரில் புகழ் பெற்று விளங்கும் தேவி பராசக்தி, ஒரு பெண் குழந்தை வடிவில் தோன்றி அற்புதங்கள் செய்து, திருக்கோயில் வலங்கைமான் என்னும் இடத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறாள்.

வேண்டும் வரமளிக்கும் வித்தகிரியாகவும், வம்பர்களை வருத்தும் மறச்செல்வியாகவும், அம்பாள் வலங்கையில் விளங்கி வருகின்றாள். மாரியம்மன் அன்னை பராசக்தியின் ஓர் அம்சமாக வெப்பம் தீர்த்து மழை தந்து உயிர் காக்கும் மகா சக்தியாகவே நம்புகின்றனர்.

அன்னை உலகியல் வாழ்க்கைக்கு உதவ, வேறு வேறு அருட்செயல்கள் புரிய ஊர்தோறும் உருவெடுத்துள்ளாள். மழையைப் பொழிவித்து மாநிலம் காக்க மாரியம்மனாகவும், நோயகற்ற பத்ரகாளியாகவும், பீடை அரியும் பிடாரியாவும், பிள்ளைகளைக் காக்கக் காத்தாயினி அம்மனாகவும், எல்லையிலிருந்து தொல்லையை அழிக்கும் எல்லையம்மனாகவும், பகையை அழித்து வெற்றி தரும் கொற்றவை எனும் துர்க்காதேவியாகவும், பராசக்தி தோன்றியுள்ளாள்.

மாரியம்மன் மழை தரும் தெய்வம், என்பதால்தான் மாரியம்மன் திருவிழா தை முதல்





பாடைக்காவடி

ஆனி வரை நடைபெறுகின்றது.

பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்கள் கடுங்கோடை காலமாதலின் அப்போது மாரியம்மன் வழிபாடு மிகுதியாக உள்ளது.

மாரியம்மனுக்கு குளிர்ச்சி என்னும் பொருளுடைய சீதாளாதேவி என்னும் பெயரும் உண்டு.

கோடை காலத்தில் வரும் அம்மை எனும் நோயை அகற்றுபவளாக மாரியம்மனே எண்ணப் படுகிறாள். அன்னை பராசக்தியே உலகின் வெப்பம் நீக்கி உயிர்களைக் காக்கும் மழையைப் பொழிய மாரியம்மனாகத் தோன்றினாள் என்று பலரும், பரசுராமனின் தாய் இரேணுகாவே மாரியம்மன் என்று சிலரும், சூரனை சம்காரம் செய்த சக்தியே மாரியம்மன் வழிபாடாக மாறிற்று என்றும், கண்ணகி வழிபாடே மாரியம்மன் வழிபாடாக மாறிற்று என்று சிலரும் கருதியபோதும் மக்கள் மாரியம்மனைப் பராசக்தியின் ஓர் அம்சமாக வெப்பம் தீர்த்து மழை தந்து உயிர்காக்கும் மகாசக்தியாகவே நம்புகின்றனர்.

வலங்கைமான் வரதராஜம்பேட்டை தெருவில் சுமார் 200 (இருநூறு) ஆண்டுகளுக்கு முன்னர் காதக் கவுண்டர் என்பவர் வசித்து வந்தார். அவர் மனைவி கோவிந்தம்மாள். இருவரும் இறைபக்தி மிக்கவர்கள். கணவர் விவசாயம் செய்து வந்தார். அவரது மனைவி திண்பண்டங்கள் விற்று வந்தார். வலங்கையின் தென்கிழக்கில் உள்ள புங்கஞ்சேரி என்ற கிராமத்தில் அவருக்கு வியாபாரம் அதிகம். ஒரு நாள் வெள்ளிக்கிழமை புங்கஞ்சேரியில் நல்ல வியாபாரம் நிறைய நெல்லும், காசும் கிடைத்தன. எல்லாம் இறைவனின் செயல் என்று எண்ணி, அங்குள்ள ஒரு குளத்தில் நீராட கணவன், மனைவி இருவரும் சென்றனர். அங்கு ஒரு பிராமணரும் அவர் மனைவியும் குழந்தையுடன் அங்கிருந்த அடைக்கலங்காத்த அய்யனார்கோவில் பக்கம் போவதைப் பார்த்தனர். குளித்துவிட்டு வரும் வழயில் அங்கு குழந்தை ஒன்று அழுவதைக் கண்டனர் கணவன் மனைவி. அக்குழந்தையை தனது ஊருக்கு கொண்டு வந்தார்கள். அந்தக் குழந்தையை அவ்வூர் நாட்டாண்மையே வளர்ப்பதாக கூறினார். ஆனால் தனக்கு குழந்தைப்பாக்கியம் இல்லையே தானே வளர்க்க விருப்பப்பட்டாலும் நாட்டாமையை எதிர்த்து பேசமுடியாமல் மனதிற்குள் வருத்தம் அடைந்தாள். சிறிது நாட்களில் நாட்டாண்மைக்காரர் ஊரில் விலங்குகளுக்கும் மக்களுக்கும் நோய் ஏற்பட்டது. ஊர் முழுக்க நோயால் அவதிப்பட்டது. அந்த நேரம் அக்கிராமத்தில் ஒருவருக்கு சாமி வந்து ஆவேசத்துடன் “அந்த குழந்தையை கோவிந்தம்மாளுக்கு கொடுத்து விடவும்” என்று கூறி விட்டார். அதன்படி குழந்தை ஒப்படைக்கப்பட்டது.

கோவிந்தம்மாள் அக்குழந்தைக்கு சீதளா எனப்பெயரிட்டு ஏழு வருடம் வளர்த்து வந்தாள். திடீரென ஒருநாள் கடுமையான நோயால் அக்குழந்தையின் உயிர் பிரிந்து விட்டது. அக்குழந்தையின் மேல் பாசம் அதிகம் வைத்ததால் தமது வீட்டின் (கொல்லையில்) தோட்டத்தில் அடக்கம் செய்து விட்டனர்.

குடமுருட்டி ஆற்றில் நீராடி விட்டு வருவோரில் சிலர் கோவிந்தம்மாள் வீட்டு கொல்லைப்புறம் வந்தபோது ஆவேசம் வந்து சாமி ஆடினர். அவர்கள் நான்தான் மாரியம்மன் குழந்தை வடிவில் இங்கு வந்தேன். என்னை வழிபடுவோருக்கு அருள்புரிவேன் என்று கூறினர். சீதளாதேவி மகாமாரியம்மன் கோயிலாகப் பெயர் பூண்டு வரந்தரும் தெய்வமாக அன்னை பராசக்தி அங்கே விளங்கலானாள்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வட்டத்தைச் சேர்ந்தது வலங்கைமான் நகர். குடந்தையிலிருந்து (இரச) மன்னார்குடிக்கு செல்லும் நெடுஞ்சாலையில் குடந்தைக்கு 9 கிலோ மீட்டர் தெற்கே உள்ளது. குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூர் நீர்வளமும் நிலவளமும் நிரம்பியது. இவ்வூருக்கு வந்து செல்லக் குடந்தையில் இருந்தும் மன்னார்குடியில் இருந்தும்திருவாரூரிலிருந்தும் பேருந்து வசதி உள்ளது.

மாரியம்மன் தலத்திற்கு வடக்கே கோயில்கள் மிகுந்த குடந்தையும், தெற்கே குருஸ்தலம் ஆகிய ஆலங்குடியும் அமைந்துள்ளதால் வெளியூர் பக்தர்கள் இவ்வூர் வழியே அடிக்கடிப் பயணம் செய்கின்றனர். அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில் நெடுஞ்சாலையை ஒட்டிக் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மற்ற சிவாலயங்களில் உள்ள சிவபெருமான் திருவுருவில் இடது கையில் மான் இருக்கும். ஆனால் வலங்கைமானில் உள்ள சிவபெருமான் திருவுருவில் வலது கையில் மான் இருப்பதால் இவ்வூருக்கு வலங்கைமான் என்று பெயர் வந்ததாகச் சிலர் கூறுவர்.

சீதையின் விருப்பத்தினால் மாயமானை இராமபிரான் துரத்திச் சென்றபோது, அம்மான் இங்கு வலப்புறமாக ஓடியதால், வலங்கைமான் என்று இவ்வூருக்கு பெயர் வந்ததாகச் சிலர் கூறுவர். இராமாயணக் கதையை ஊருடன் தொடர்புபடுத்திப் பேசும் செவி வழிச் செய்திகள் நிரம்ப உள்ளன. வலங்கைமான் மகா மாரியம்மன் ஈசான்ய திசையில் அமைந்துள்ளது. அதனால் இவ்வூர் தெய்வத்தன்மையும் நீர்வளமும், நிலவளமும் சிறப்பாக பெற்றுள்ளது. தெய்வீக சக்தி நிரம்பிப் பொங்குவதற்கு ஈசான்ய திசையும் ஒரு பெருங்காரணமாக உள்ளது. கிழக்கு நோக்கிய வாசவி அமைந்துள்ளது.

திருக்கோயிலின் கருவறையில் எழுந்தருளியிருப்பவளே சீதளாதேவி மகாமாரியம்மன். இவள் அமர்ந்த நிலையில் நாற்கரங்களுடன் திகழுகின்றாள். வலது மேற்கரத்தில் உடுக்கையும் இடது மேற்கரத்தில் சூலமும் உள்ளன. வலது கீழக்கரத்தில் கத்தியும் இடது கீழக்கரத்தில் கபாலமும் உள்ளன. இடது காலை மடித்து, வலது காலை தொங்கவிட்டு அன்னை வீரசிம்மாசனத்தில் அமர்ந்துள்ளாள். இரு தோள்களின் மீதும் இரு நாகங்கள் உள்ளன.

பக்தர் பலர் பல்வேறு வேண்டுகோளை அன்னையின் திருவடியில் வைக்கின்றனர். அவை காலப்போக்கில் நிறைவேறி வருவதனால்தான் மக்கள் தொடர்ந்து அன்னையின் ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்தும், வேண்டுதலை செலுத்திக் கொண்டும் உள்ளனர்.

மேலும் இத்தலத்தில் ஒரு சிறப்பு பாடைக்காவடி, மருத்துவரால் கைவிடப்பட்டவர்கள், நோய் தீர்ந்தால் பாடைக்காவடி எடுப்பதாக வேண்டிக் கொள்கிறார்கள். அவ்வாறு அவர்களின் வேண்டுதல் நிறைவேறும் சமயம் அம்மனுக்கு நேர்த்திக் கடனாக பாடைக்காவடி எடுத்து தங்களது நேர்த்திக் கடனையும், அன்பையும் வெளிப்படுத்துகின்றனர் பக்தர்கள்.

பாடைக்காவடி என்பது இறந்தவர்களுக்கு செய்யும் அனைத்து முறைகளையும் செய்து எடுக்கப்படும் காவடியாகும். அதே போன்று காணாமல் போன பொருளை கிடைக்கச்செய்வது, அந்த பொருள் கிடைத்தால் அதை அப்படியே அம்பாளுக்கு கொடுப்பதாக வேண்டிக் கொள்வது. தமது அங்கங்களில் எப்பகுதி பாதிக்கபட்டு இருந்தாலும் அப்பகுதி சரியாக வேண்டும் என்று அம்மன் சன்னதியில் அங்கப்பிரதட்சணம் செய்தும் வேண் டிக்கொள்கின்றனர்.

இக்கோவிலின் சிறப்பே திருமாங்கல்யப் பிரார்த்தனை ஆகும். கணவனுக்கு உடல்நிலை, உபாதைகள், உயிருக்கு ஆபத்து இப்படி இன்னும் எவ்வளவோ. அத்தனைக்கும் அம்பாளிடம் “உயிர் பிச்சைத் தா உனக்கு மாங்கல்யத்தை காணிக்கை ஆக்குகிறேன்” என்று வேண்டிக் கொள்வர். திருமணம் ஆகாதவர்கள், திருமணம் நடை பெற்றால் அத்திருமாங்கல்யத்தை அம்பாளுக்கு காணிக்கை ஆக்குகிறார்கள். உண்டியல் முழுவதும் திருமாங்கல்யம் நிறைந்ததாக எப்பொழுதும் இருக்கும்.

அம்மை கண்டவர்களின் மாமருந்தாகப் பயன்படுவது அன்னையின் அபிஷேகப்பாலும் வேப்பிலையும்தான். குழந்தை வரம், குழந்தை இல்லாதவர்கள் அம்பாளிடம் வேண்டிக்கொண்டு, வெள்ளியில் தொட்டில் செய்தும், மணி வாங்கியும், குழந்தையின் எடைக்கு எடை நாணயங்களை வைத்தும் ஒரு சில பக்தர்கள் தமது குழந்தைக்கு அம்பாளின் பெயரை வைத்தும் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள்.

அதேபோன்று இத்திருத்தலத்தில் எமபயம் நீங்கிடவும் குழந்தை வரம் பெற்றிடவும், அம்பாளின் முடிகயிறு பெற்றுச் செல்கின்றனர்.

இக்கோயிலில் திருவிழாக்கள் ஒன்பது நாட்கள் நடைபெறும். செடில் திருவிழா, மஞ்சள் நீர் விளையாட்டு, புஷ்ப பல்லக்கு என்று அத்தனை நாட்களும் பக்தர்களின் கூட்டம் அலைமோதும். இக்கோயிலுக்கு ஒருமுறை வந்து அம்பாளைப் பார்த்தவர்கள் வருடாவருடம் பங்குனி மாதம் அம்பாளைப் பார்க்க விரும்புவர். அவ்வளவு அழகுடன் காட்சி தருகிறாள் அம்பாள்.

– கௌரி பிரகாஷ்

செல் 9841920503

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# ஆசையால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல ஓடுகின்றனர்

- உலகத்தின் மீது கொண்டுள்ள அளவு கடந்த பற்றை விடுங்கள். வாழ்க்கையில் ஒருவனுடைய செல்வமோ, அதிகாரமோ அவனை மேலும் மேலும் கீழ்நிலைக்குத் தள்ளி விடுகின்றன.
- ‘அவன் என்னை நிந்தித்தான், தாக்கிச்ன், என் பொருளை அபகரித்தான்’ என்று எண்ணிக் கொண்டே இருந்தால், எந்நாளும் பகைமை தீர்வதில்லை. அத்தகைய எண்ணங்களுக்கு சிறிதும் இடம் தராதீர்கள். அவனிடம் அன்புகாட்டுங்கள். பகைமை மறைந்துவிடும்.
- உங்கள் அறிவை நீங்களே தூண்டிக் கொள்ளுங்கள். உங்கள் நீங்களே பரிசோதனை செய்யுங்கள். இதனால், வாழ்வில் உண் டாகும் துன்பங்களைத் தடுத்துக்கொள்ளும் வலிமை உண் டாகும்.
- பொற்காசுகளை மழையாகப் பொழிந்தாலும் ஆசைகள் அடங்காமல் பெருகும். ஆசைகளின்படி அனு பவித்தல் அற்ப இன்பம் என்றும் பின்விளைவு துக்கமென்றும் அறிந்தவன் ஞனியாவான்.
- தன்னுடைய பகையால் ஏற்படும் தீமைகளை விட அடக்கம் இல்லாத மனமே ஒருவனுக்கு அதிகமான தீமைகளை ஏற்படுத்துகிறது.
- எந்த ஒரு நதியாலும் ஒருவனுடைய பாவத்தைக் கழுவ முடியாது. எந்த ஒரு சடங்கும் நம்மைத் தூய்மைப்படுத்தாது. தயவு, தருமசிந்தை, அமைதி போன்ற நல்லொழுக்கங்கசே நம்மை ஈடேற்றும்.
- நன்கு வேயப்படாத கூரை வீட்டில் மழைநீர் புகுந்து விடுவது போல புண்படுத்தப்படாத மனதில் ஆசைகள் புகுந்துவிடும். ஆசையைப் போன்ற நெருப்பு வேறு எதுவும் இல்லை. இதனால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல ஓடுகின்றனர்.

